
# இறையியல் கோலங்கள்

வடிவம் — 13 யூன், செப்ரம்பர், 2000 வண்ணம் — 2, 3



## நற்கருணையில் மலரும் அன்பியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bro. M. Shoban Rufus

# இறையியல் கோலங்கள்

## காலாண்டு வெளியீடு

# Irai Iyal Kolangal

## *Tamil Theological Quarterly*

**VOL: 13**
**NO: 02 JUNE**
**NO: 03 SEPTEMBER**

**வடிவம்: 13**
**வண்ணம்: 02 யூன்**
**வண்ணம்: 03 செப்ரம்பர்**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்:

அருட்திரு. ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள்:

அருட்திரு. ச. வி. ப. மங்களராஜா
அருட்திரு. பி. யே. ஜெபரெட்ணம்
அருட்சகோ. செ. எ. றொஷன்
அருட்சகோ. சி. லியோ ஆம்ஸ்ரோங்
அருட்சகோ. தே. ரவிராஜ்
அருட்சகோ. செ. அன்ரன்

விநியோகம்:

அருட்சகோ. ம. பத்திநாதர்
அருட்சகோ. இ. கி. ம. அஞ்சலோ

வெளியீடு:

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**
**(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)**

Editor:

REV. FR. J. NICHOLAS

SUB EDITOR:

REV. FR. S.V.B. MANGALARAJAH
REV. FR. P.J. JEBARATNAM
BRO. S. A. ROSHAN
BRO. S. LEO. ARMSTRONG
BRO. T. RAVIRAJAH
BRO. S. ANTON

DISTRIBUTION:

BRO. M. PATHINATHAR
BRO. R. C. M. ANGELO

PUBLICATION:

St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna,
Sri Lanka.
Tel. No. 021-2482

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

ஆசிரியர் கருத்து

1. நற்கருணை – திருச்சபையின் வரலாற்றில் 02
அருட்திரு. மங்களராஜா

2. நற்கருணை – ஓர் விவிலியப் பார்வை 08
அருட்சகோ. சூசைநாதன்

3. கிறிஸ்தவ சிறிய குழுமங்களும் தூய ஆவியும் 14
அருட்திரு J.E. ஜெயசீலன்

4. அன்பியங்கள் மலரட்டும் 18
அருட்திரு செ. அந்தோனிமுத்து அ.ம.தி

5. இன்றைய எம் வழிபாடுகள் அர்த்தமுள்ளவையா? 21
செல்வி. து. டெனி

6. லூக்கா நற்செய்தியின் அனைத்துத் தன்மை 24
ஓர் குறுகிய ஆய்வு
செல்வி. செங்கோல் யூலியா

7. கேள்வி பதில் 28

8. இறையியலாளர் அறிமுகம் 32

9. Synopsis 34

10. குறுக்கெழுத்துப் போட்டி 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்
## ஆசிரியர் கருத்து

2000ஆம் யூபிலி ஆண்டின் கொடுமுடியாக "நற்கருணை வாழ்வின் அப்பம்" என்ற மையப்பொருள் எமக்குத் தரப்பட்டுள்ளது. யூபிலி ஆண்டுச் செபத்திலே நற்கருணை அன்பின் ஊற்று, ஒன்றிப்பின் சின்னம் என்னும் உண்மைகளை தினமும் தியானிக்கின்றோம். ஆதிக்கிறிஸ்தவ குழுமத்தின் அன்புறவு, பகிர்தல் ஆகியவற்றின் ஊற்றாக நற்கருணை விளங்கியதை திருத்தூதர் பணியில் அறிகின்றோம். நற்கருணை இல்லாமல் கிறிஸ்தவ வாழ்வு வெறுமை யுள்ளதாய் மாறிவிடும்.

நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், உறுதிபெறவும் நற்கருணையே ஊட்டமாய் இருக்கிறது. வேத சாட்சிகளுக்கும், புனிதர் களுக்கும் உயிரூட்டமாய் விளங்கியதும் நற்கருணையே. "என் சதை உண்மையான உணவு, என் இரத்தம் உண்மையான பானம்" என்று கூறிய கிறிஸ்துவின் வார்த்தையை தினமும் பலிப்பீடத்தில் உண்மை நிகழ்வாக நிறைவேற்றுகின்றோம். இதே விசுவாசத்தோடுதான் கிறிஸ்தவர்கள் நற்கருணையை உட்கொள்ளுகின்றனர். நற்கருணை விருந்தை நாம் உட்கொள்ளுவது மட்டும் போதாது மாறாக நற்கருணை ஆண்டவரின் சாட்சிகளாக வாழ்வது மிக அவசியமான தொன்றாகும்.

கொரிய நாட்டிலே சில ஆண்டுகளுக்கு முன் யூலியா என்ற பெண் ஒருத்தி நற்கருணையை அருந்தும்போது அது இரத்தம் தோய்ந்த சதையாக மாறிய புதுமையை நாம் அறிவோம். இதுபோன்று பல புதுமைகள் நற்கருணை வழியாக வெளிப்பட்டன. திருப்பலியில் தினமும் நடைபெறுவது ஒரு புதுமையே. சாதாரண அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திரு உடலாக, இரத்தமாக மாறுகின்றன. இதையே நாங்கள் தினமும் எமது விசுவாசத்தின் மறைபொருளென அறிக்கை யிடுகின்றோம்.

இன்று பல பங்குகளிலே அன்பியக் குழுக்கள் மலர ஆரம்பித் துள்ளன. அன்பியங்கள் நற்கருணையை மையமாகக்கொண்டு சாட்சிய மான வாழ்வுக்கு அழைப்புப்பெறுகின்றன. இறைவார்த்தைப் பகிர்வும் நற்கருணையிலே விசுவாசம் கொண்டிருக்க தூண்டுதலாக அமைந் துள்ளது. அன்பிய ஒன்றுகூடல்கள், உணவுப் பகிர்தல் ஆகியவை வாழ்க்கைப் பகிர்வையே நினைவூட்டுகின்றன. நற்கருணையின்றி பகிர்தல் அர்த்தமற்றதாகிவிடும். வாழ்வும் வழிபாடும் இணைந்திருக்க நற்கருணையே சக்தியைத் தருகின்றது. இவ்விதழில் காணும் கட்டுரைகளும் மேற்கூறிய உண்மைகளை எமக்குத் தெளிவுற காட்டி நிற்கின்றன.

– அருள்திரு ஜே. நீக்கிலஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை – திருச்சபையின் வரலாற்றில்

நாம் திருப்பலியில் உணவாக உட்கொள்ளும் அப்ப வடிவிலுள்ள ஆண்டவரின் திருவுடல் கிரேக்கமொழி மூலத்திலிருந்து நோக்கும்போது Eu – நல்ல + Charizesthai - இரக்கம் (கருணை) காட்டுதல் = "நற்கருணை" எனப்படுகின்றது. இலத்தீனில் கடைசி இரவுணவின்போது யேசு கூறிய நன்றி கூறும் வேண்டுதலை (மத் : 26/27)ப் பின்பற்றி ஆதித்திருச்சபையில் வழிபாட்டுத்தலைவர்கள் (ஆயர்) கூறும் Eucharistia – நன்றி கூறல் - நன்றிச் செபமாக அர்த்தம் பெறுகின்றது.

*ஆதித்திருச்சபையில்:–*

ஆதித்திருச்சபையின் வழிபாட்டின் முக்கிய அம்சமாக யேசுவின் இறுதியுணவை நினைவு கூரும் அப்பம் பிட்கும் சடங்கு இடம்பெற்று வந்துள்ளது (தி.ப. 2/42, 20/7–11). யேசுவின் கட்டளைக்கு இணங்கவே இந்த "அப்பம் பிட்குதல்" இடம்பெற்று வந்துள்ளது (லூக் 22/19, 1கொரி 11/24f). ஆதிக்கிறிஸ்தவ சமூகம் இச்சடங்கை கிறிஸ்து பலியானதை நினைவுகூரும் ஒரு சமூக விருந்தாகக் கொண்டாடி வந்தது. புனித பவுலின் மடல்களில் ஆண்டவரின் இறுதி இரவுணவுக் கொண்டாட்டம் எவ்வாறு இடம்பெற்றதென தகவல்கள் அவ்வளவாக இல்லாவிடினும் இது ஒரு உணவு விருந்து என்பதற்கான நடைமுறை களைக் கொண்டுள்ளது (1 கொரி 11/17 – 27).

ஆண்டவரின் திருஉடலும் திருஇரத்தமும் உண்மையிலேயே அப்ப இரசத்தின் வடிவில் உட்கொள்ளப்படுவதால் யாராவது இவ்விருந்தில் தகுதியற்ற முறையில் பங்குபற்றும்போது அவர்கள் ஆண்டவரை மறுதலித்த குற்றத்திகுள்ளாகின்றனர் (1கொரி 11/27). கிறிஸ்தவர்கள் மீண்டும், மீண்டும் இவ்விருந்தில் கலந்துகொள்வது இவர்களுக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள நேரடிப்பிணைப்பை வலியுறுத்தியமையால் கிறிஸ்தவ சமூகம் முழுவதும் மகிழ்வுடன் தன் நன்றியுணர்வை வெளிப்படுத்தி வந்தது (எபே 15/20).

அத்துடன் இவ்விருந்து ஆண்டவரின் இரண்டாம் வருகையின் உத்தரவாதமாகவும், நிறுவப்படும் இறையரசில் நம்பிக்கையூட்டும் முன்சுவையாகவும் அமைந்திருந்தமையால் இதில் கலந்துகொள்வோர் "ஆண்டவர் யேசுவே வாரும்" (மாரனாத்தா) என நம்பிக்கையுடன் ஆர்ப்பரித்தனர் (1 கொரி 16/22, தி.வெ. 22/20). மேலும் கிறீஸ்துவின் உடலாகிய ஒரே அப்பத்தில் எல்லோரும் இறை சமூகமாகக் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதால் இது ஒற்றுமையின் அருட்சாதனமாகவுள்ளது. (1கொரி 11/17).

*2ம் நூற்றாண்டில்:–*

நற்கருணை விருந்து பெற்றிருந்த உயரிய நிலை முதல் நூற்றாண்டு முடிவடைவதற்குள்ளேயே சில பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி இருந்தது. கொரிந்து நகரில் நற்கருணை விருந்துடன் சேர்ந்து வந்த சமூக ஏற்றத்தாழ்வுகளும் அதன் விரும்பத்தகாத வெளிப்பாடுகளும் இதற்குச் சான்று பகருகின்றன (1கொரி 11:17 – 22). மாலையில் இடம்பெற்று வந்த நற்கருணைக் கொண்டாட்டம் "அன்பு விருந்து" அல்லது "சகோதரத்துவப் பகிர்வை" (agape)த் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது. நற்கருணையிலிருந்து "இவ் அன்புவிருந்து" பிரிக்கப்படுவதற்குப் பவுல் குறிப்பிடும் குறைபாடுகளும் பின்னர் சில வருடங்களின் பின் யூதா தனது மடலில் சுட்டிக்காட்டும் முறையற்ற நடைமுறைகளும் சில காரணங்களாய் இருந்திருக்கலாம். அத்துடன் அப்போஸ்தலர் காலம் முடிவடைந்து 2ம் நூற்றாண்டு ஆரம்பித்த காலத்தில் கிறீஸ்தவர்களுக்கெதிரான உரோமச் சட்டங்கள் கடுமை யாக்கப்பட்டபோது சக்கரவர்த்தி ட்ராஜன் (97 – 117) மாலைநேர ஒன்று கூடல்களைத் தடைசெய்ததும் பிறிதொரு காரணமாயிருக்கலாம்.

பின்னர் ஞாயிறு தினங்களில் காலையில் நற்கருணைக் கொண்டாட்டம் இடம்பெறலாயிற்று. புதியேற்பாட்டுத் தகவல்களுக்குப் பின் நற்கருணை பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றவர் மறைசாட்சியான புனித யுஸ்தீனார் (C100 – 165). 150ஆம் ஆண்டளவில் இவர் உரோமச் சக்கரவர்த்தி அந்தோனினுஸ் பியுஸ் (131 – 168) என்பவனுக்கு நற்கருணை பற்றி விளக்குகிறார்.

நற்கருணைக் கொண்டாட்டம் திருத்தூதர்களது மடல்களிலிருந்து அல்லது இறைவாக்கினர் நூல்களிலிருந்து வாசகங்களுடன் ஆரம்ப மானது. அதனைத்தொடர்ந்து வழிபாட்டுத் தலைவரால் மறையுரை வழங்கப்பட்டது.

*3ஆம் நூற்றாண்டில்:–*

புனித கிப்பொலிற் 220இல் "அப்போஸ்தலிக்க பாரம்பரியம்" எனும் நூலில் நற்கருணை வழிபாடு பற்றிக் கூடுதல் தகவல்கள் தருகிறார். இக்காலத்தில் வழக்கிலிருந்த பிரதான நற்கருணை மன்றாட்டு முக்கியத்துவம் வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3ம் நூற்றாண்டில் பல நற்கருணை மன்றாட்டுக்கள் வழக்கிலிருந்தாலும், அடிப்படையில் முக்கிய அம்சங்களைக் கொண்ட பொதுவான ஒருமுறை நடைமுறைக்கு வந்தது. இதில் நற்கருணையின் பலித்தன்மை, நற்கருணையில் கிறீஸ்துவின் உண்மையான பிரசன்னம் ஆகிய பண்புகள் தெளிவாயிருந்தன. தேற்றுள்ளியன் (C160 – C 222) தனது குறிப்புகளில் நற்கருணை வழிபாடு இந்த அம்சங்களைக் கொண்டிருந்தது என்கிறார். குறிப்பாக கிறீஸ்து கூறிய "இது என் உடல்" எனும் வார்த்தைகளால் அப்பம் அவரது உடலாகிறது என்கிறார்.

## *4ம், 5ம் நூற்றாண்டுகளில்:–*

உரோமைச் சக்கரவர்த்தி கொன்ஸ்ரன்ரைனின் மதமாற்றத்துடன் (313) நற்கருணைக் கொண்டாட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டன. கிறீஸ்தவர்களின் தொகை பெருகப் பெருக திருச்சபையின் அமைப்பு முறைகளிலும் வழிபாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இதுவரை தனியார் இல்லங்களிலும் மறைவிடங்களான நிலவறைகளிலும் கொண்டாடப்பட்ட நற்கருணை வழிபாடுகள் புதிதாகக் கட்டப்பட்ட பாரிய ஆலயங்களில் இடம்பெறத் தொடங்கின. நற்கருணை வழிபாடு விரிவுபடுத்தப்பட்ட நிலையில் "பலி" (mass) என்று அழைக்கப்படத் தொடங்கியது. புனித அம்புறோசியார் (C. 340 – 397) இதற்கு சான்று பகர்கிறார்.

## *6ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை:–*

10 நூற்றாண்டு காலம் நீண்ட இக்காலப்பகுதிகளில் திருப்பலியின் பண்புகளை வெளிப்படுத்தும் சடங்குகளில் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாவிடினும் மக்களின் அணுகுமுறையிலும் அவர்கள் திருப்பலியைப் புரிந்துகொண்ட விதத்திலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இவற்றுள் சில மக்களின் தவறான கண்ணோட்டத்தைச் சுட்டிக்காட்டின.

கிறீஸ்தவர்கள் நற்கருணை உட்கொள்வதற்குத் தாம் தகுதி யற்றவர் எனக்கருதி அதனைத் தவிர்க்க முற்பட்டனர். இதன் விளை வாக மத்திய கால இறுதிக் கட்டத்தில் (15ஆம் நூற்றாண்டு முடிவில்) பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வருடத்தில் ஒருமுறை மட்டும் அல்லது சில தடவைகளில் இருமுறை நற்கருணை உட்கொண்டனர். மற்ற சந்தர்ப்பங்களில் வெறும் பார்வையாளராக மட்டும் கலந்துகொண்டனர். இதனால் நற்கருணையை ஒரு உணவாக, நித்திய வாழ்வை வழங்கும் உணவாக அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை குறைந்துகொண்டு போனது. நற்கருணை தொலைவிலிருந்து ஆராதிக்கப்படும் ஒரு பரிசுத்த பண்டமாக மட்டுமே கருதப்படத்துவங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

802இல் மாமன்னர் சாள்ஸ் வகுத்த சட்டங்களின்படி திருப்பலி பற்றிய எல்லா விளக்கமும் மக்களுக்கு வழங்க வேண்டிய கடமை குருக்களுக்கே இருந்தது. பழையேற்பாட்டு இறைவாக்கினரில் இருந்து புதியேற்பாட்டில் ஆண்டவரின் விண்ணேற்றம் வரையிலான மீட்பின் வரலாறு முழுவதும் அடையாள வடிவில் திருப்பலியில் அடங்கி யுள்ளமை மக்களுக்கு விளங்க வைக்கப்படவேண்டும். இவ்வாறாக திருப்பலியில் குருவின் பணியே அனேகமாக எல்லாமாக இருந்தது. இதனால் குரு தனியாக ஒப்புக்கொடுக்கும் திருப்பலி பிரபல்யமாயிற்று. மக்கள் தங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்க விடுக்கும் விண்ணப்பங்களும் அதிகரிக்கத் தொடங்க ஆலயங்களில் பல பீடங்கள் கட்டப்பட்டன. பல குருக்கள் தினமும் பல திருப்பலிகள், சிலவேளைகளில் பீடப்பணியாளர்கள் எவருமின்றி ஒப்புக்கொடுத்தனர். இதனால் பல ஊழல்கள் தலைதூக்கின. இதனால் ஒரு குரு மூன்று திருப்பலிகளுக்கு மேல் ஒரு நாளுக்கு ஒப்புக்கொடுக்கக் கூடாதென்ற விதிமுறை ஏற்படுத்தப்பட்டது. பாப்பு 2ம் அலைக்ஸ்சாண்டர் (1061 – 73) ஒரு நாளைக்கு ஒரு குரு ஒரு திருப்பலி மட்டுமே வழமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொணர்ந்தார்.

13ம் நூற்றாண்டுப் பகுதியில் குரு தனியாக ஒப்புக்கொடுக்கும் திருப்பலி அதனை ஒரு சமூக வழிபாடு என்ற அடிப்படையையே மாற்றியது. திருப்பலியின் சடங்குகளிலும், செபங்களிலும், பாடல் களிலும், பாடகர் குழு, தியாக்கோன் போன்ற மற்ற திருப்பணியாளர், இறைமக்கள் ஆகியோர் கலந்துகொண்டாலும் குரு சொல்வதும் பாடுவதும் மட்டுமே செல்லுபடியாகும் என்ற கருத்து நிலவியது.

மக்களுக்கும், திருப்பலிக்கும் இடையே இருந்த இடைவெளியை நிரப்ப சில பக்தி முயற்சிகள் புகுத்தப்பட்டன. கேட்பதிலும் பார்க்க பார்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இவ்வாறாக காணிக் கையைத் தொடர்ந்து நற்கருணை உயர்த்தப்பட்டபோது அதை உற்று நோக்குவது முக்கியமெனக் கருதப்பட்டது. ஆங்காங்கே ஆயரவை களில் எல்லோரும் பார்க்கக்கூடிய விதத்தில் குரு நற்கருணையை நன்கு உயர்த்திப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. திருப் பலிக்குச் செல்வது என்பது இந்தக் கட்டத்திற்கு முன் செல்ல வேண்டும் என்னுமளவிற்கு நற்கருணையை உயர்த்தும் சடங்கு முக்கி யத்துவம் பெற்றது.

இதனால் 14ஆம் நூற்றாண்டில் நற்கருணைப் பவனி, எழுந்தேற்றம், நற்கருணை ஆசீர் ஆகியவை எவ்வளவிற்கு வலியுறுத் தப்பட்டனவென்றால் நற்கருணை ஒரு பலியாகவும் விருந்தாகவும் கொண்டாடப்படுவது குறைந்து போனது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *திரிதெந்தீன் பொதுச்சங்கம் - 16ம் நூற்றாண்டு.*

மாட்டின் லூத்தர் மற்றும் கல்வின், ஸ்விங்லி ஆகியோர் நற்கருணை பற்றிக் கொண்டிருந்த தவறான கொள்கைகள் இச்சங் கத்தில் சுட்டிக்காட்டப்பட்டு திருச்சபையின் படிப்பினைகள் வலியுறுத்தப் பட்டன.

சங்கத்தின் தீர்மானங்கள் 1551இல் வெளியிடப்பட்டன. இவற்றின் படி திருப்பலியில் அப்ப, இரச வசீகர வேண்டுதலின் பின் இறைவனும் மனிதனுமாகிய யேசு அப்ப இரச வடிவில் உண்மையில் பிரசன்ன மாயுள்ளார். ஆண்டவரும் மீட்பருமாகிய யேசுக்கிறீஸ்துவே கடைசி இராவுணவின்போது இந்நற்கருணை என்ற திருவருட்சாதனத்தை ஏற்படுத்தினார். இதற்குப் புதியேற்பாட்டில் பல பகுதிகள் சான்றா யுள்ளன. இத்திருவருட்சாதனம் மற்ற திருவருட்சாதனங்களிலும் மேன்மை மிக்கது. காணிக்கையின்போது இடம்பெறுவது தன்மை மாற்றம் (Transubstantiation) வெளிப்பார்வைக்கு அப்பமும் இரசமும் அப்படியே இருக்க, தன்மையில் அவை ஆண்டவரின் திரு உடலாக வும் திரு இரத்தமாகவும் மாறுகின்றன. கடவுளுக்கே உரிய மிக உயர் ஆராதனை நற்கருணைக்கும் வழங்கப்படவேண்டும். நற்கருணை விருந்தில் கலந்துகொள்வோர் அருள் நிலையில் இருக்கவேண்டும். அத்துடன் கடவுளுக்கு மட்டுமே திருப்பலி ஒப்புக்கொடுப்பதால் புனிதர்கள் பெயரால் பலி ஒப்புக்கொடுக்கப்படுவது ஏற்றுக்கொள்ளப் பட்டது. குரு தனியாக ஒப்புக்கொடுக்கும் பலியும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

## *திரிதெந்தீன் சங்கத்தின் பின்:-*

சங்கம் மேற்கொண்ட தீர்மானங்களுக்கமைய பின்வந்த ஆண்டு களில் பொதுவாக திருவழிபாட்டில் இருந்த குறைபாடுகளைக் களைய சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1570இல் ஒரு பொதுவான திருப்பலிச் சடங்கு நூல் வெளியிடப்பட்டது. 1614இல் திருவருட்சாதனச் சடங்கு நூல் ஒன்று வெளியானது. ஆனால் துர்அதிஷ்டவசமாக தொடர்ந்து வந்த மூன்று நூற்றாண்டுகளும் திருவழிபாட்டைப் பொறுத்தவரையில் குறிப்பாக திருப்பலி நடைமுறைகளைப் பொறுத்தள விலும் ஒரு தேக்க நிலையே நிலவியதெனலாம். உதாரணமாக நற்கருணை விருந்தில் கலந்துகொள்வது திரும்பவும் அரிதாகியது. மக்களுக்கும் திருப்பலிக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டிருந்தது. இந்த இடைவெளியை நிரப்புவதற்கு பல திருவழிபாட் டுக்குப் புறம்பான பக்தி முயற்சிகள், ஆடம்பர பவனிகள் போன்றவை தோன்றின. இவற்றின் வளர்ச்சியில் பல சந்தர்ப்பங்களில் மூட நம்பிக்கைகளும் கலந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து அடிக்கடி நற்கருணை உட்கொள்வது, நேர காலத்துடனே முதல் நன்மை பெறுவது, நற்கருணை ஆராதனை போன்றவற்றிற்கு ஆதரவாகப் பல குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. 9ஆம் பத்திநாதர் பாப்பரசரின் (1846 – 1878) ஆட்சிக்கால இறுதியாண்டுகளில் நற்கருணைப் பக்தியை வளர்க்கவென முதல் முறையாக சர்வதேச நற்கருணை மகாநாடுகள் கூட்டப்பட்டன. நற்கருணைப் புதுமைகள் நடந்த பிரான்சில் உள்ள அவிஞ்ஞோனில் 1876இல் முதல் மகாநாடு கூட்டப்பட்டது.

*திருவழிபாட்டு இயக்கம்:–*

பாப்பரசர் புனித 10ம் பத்திநாதர் (1903 – 1914) உடைய திருவழிபாட்டு சீர்திருத்தங்கள் இறைமக்களை திருவழிபாட்டில் முழுப் பங்காளிகளாக்குவதைக் குறிக்கோளாகக்கொண்ட திருவழிபாட்டு இயக்கம் தோன்றுவதற்கு வழிவகுத்தன. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே முதலில் 13ஆம் சிங்கராயரும், தொடர்ந்து 10ம் பத்திநாதரும் பல சுற்றுமடல்கள், அறிவுறுத்தல்கள் போன்றவற்றின் உதவியுடன் அடிக்கடி அல்லது ஒவ்வொரு நாளும் நற்கருணை உட்கொள்வது, புத்தி விபரம் அறிந்தவுடனேயே உட்கொள்வது, உட்கொள்வதற்கு வேண்டிய இரு தகுதிகள் - அருள் நிலையும், சரியான நோக்கம் போன்ற கருத்துக்களை வலியுறுத்தினர். 2ம் வத்திக்கான் சங்கம் அறிமுகம் செய்த மாற்றங்களையும் சிந்தனை களையும் குறிப்பாக திருவழிபாடு பற்றியும் அதில் நற்கருணை, நற்கருணை வழிபாட்டில் முழுமையாகப் பங்கெடுத்தல் பற்றிய விடயங்களை ஏற்றுக்கொள்வதற்கான களநிலையை ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேலாக திருவழிபாட்டு இயக்கம் ஏற்படுத்தியிருந்தது.

– அருட்திரு. மங்களராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நற்கருணை ஓர் விவிலியப் பார்வை"

## முன்னுரை

அன்பு, ஒன்றிப்பு, பகிர்தல் போன்ற நல் மதிப்பீடுகளின் ஊற்றாகவும் மையமாகவும் பரிணமிக்கும் நற்கருணை என்னும் அருட் சாதனம் இயேசுக் கிறிஸ்து எமக்கு விட்டுச் சென்ற முடிவில்லா வாழ்வு நல்கும் நல் உணவாகும். நற்கருணையில் கிறிஸ்து தமது உடல், இரத்தம் ஆகியவற்றுடன் உண்மையாகவே அப்ப இரச வடிவில் பிரசன்னமாகிறார் என்பது எமது அதி உன்னத நம்பிக்கையின் சத்திய மாகும். தமது விண்ணகத் தந்தைக்கு தம்மை அர்ப்பணிக்கவும், தம்மில் நம்பிக்கை கொள்வோருக்கு ஆன்ம உணவாக அமையவும் நற்கருணையை இயேசு ஏற்படுத்தினார். இவ் அருட்சாதன விருந்து இயேசுவின் போதனைக்கு ஏற்பவும், கட்டளைக்கு அமையவும் இன்றும் கொண்டாடப்படுகிறது. நற்கருணை நன்றியை சுட்டி நிற்பதால் நன்றியின் பலி என்றும் அழைக்கப்படுகின்றது. இங்கே அவரே நன்றியின் மையமாகவும் பொருளாகவும் தோன்றுகின்றார். நன்றியின் (Eucharistein) வார்த்தைகளை அப்ப இரசத்தின் மேல் செபிப்பதன் ஊடாக மீட்பின் பொருளான இயேசுக்கிறிஸ்து பிரசன்னமாகின்றார். இம்மீட்பின் செயலும் நன்றியின் தோற்றப்பாடும் பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே செயல்வடிவம் பெற்றது கண்கூடு. இதற்கு பாஸ்கா விருந்தும், இரத்தத்தின் உடன்படிக்கையும் ஆதாரங்களாக அமைகின் றன. பழைய ஏற்பாட்டின் செயல்பாடு புதிய ஏற்பாட்டில் நிறைவடைந்து நற்கருணையிலே இன்றும் முழுமையாக வெளிப்படுத்தப்படுகின்றது.

## 1. பாஸ்கா விழா

யூத மதத்தவரின் முதன்மையான விழாவாகிய பாஸ்கா விழா நற்கருணையின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. ஏனெனில் நற்கருணை நாயகன் கிறிஸ்துவும் பன்னிரண்டு அப்போஸ் தலர்களும் யூதர்கள், யூத கலாச்சாரத்தை அனுசரிப்பவர்கள், யூத சமய பாரம்பரியங்களுக்கு கட்டுப்பட்டவர்கள். அவ்வாறே அன்று பாஸ்கா கொண்டாட்டம் யூத வாழ்வின் மையமாக மிளிர்ந்தது.

### 1.1. பாஸ்கா விழாவின் தோற்றப்பாடு

பாஸ்கா விழாவின் தோற்றப்பாட்டைக் கணிப்பிடுவது மிகவும் கடினமானதொன்று. ஏனென்னில் இதற்கான ஆதாரங்கள் திருவிவிலியத் தில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. விவிலிய ஆய்வாளர் களின் கருத்துக்கமைய விடுதலைப்பயண நூல் 12ஆம் அதிகாரத்தின்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவின் தோற்றப்பாட்டை ஓரளவேனும் அறியமுடிகின்றது. முழுமையான பாஸ்கா விழாவில் பின்வரும் இரு விழாக்கள் இரண்டறக் கலந்திருப்பதை அவதானிக்க முடியும். நேர்த்தியான பாஸ்கா (வி.ப 12:14) புளியாத அப்ப பெருவிழா (Feast of the unleavened Bread) (வி.ப 12:15 – 20) ஆகிய இரு தனித்தன்மை கொண்ட விழாக்களின் கூட்டுச்சேர்ப்பே பாஸ்கா விழா. இரண்டுக்கும் இடையே மிகவும் நெருங்கிய பிணைப்பு காணப்பட்டமையால் பிற்காலத்தில் ஒன்றுசேர வாய்ப்பு ஏற்பட்டது.

## 1.2. நேர்த்தியான பாஸ்கா [Passover Proper]

யூத சமயத்தினரால் இளவேனிற்காலத்தில் கொண்டாடப்படும் ஒரு விழாவே "நேர்த்தியான பாஸ்கா" விழாவாகும். தமக்குரித்தான மந்தைகளை பாதுகாக்க வேண்டி ஒரு இளம் செம்மறி பலியாக இத்திருவிழாவில் ஒப்புக் கொடுக்கப்படும். எபிரேயர் நாடோடிகளாக வாழ்ந்த காலப்பகுதிகளில் மிகவும் நுணுக்கமாக கொண்டாடப்பட்டு வந்த விழாவாகும். ஆனால் மோசேயின் காலத்தில் இதன் நோக்கம் மாற்றியமைக்கப்பட்டது. மீட்கப்பட்டமையை நினைவுகூரும் முகமாகவும் நன்றி செலுத்தும் நிமித்தமாகவும் கொண்டாடப்படவேண்டும் என்ற பரிணாமம் பெற்றது. இஸ்ராயேல் மக்கள் உண்மையாகவே இறைவனின் பராமரிப்பை உணர்ந்திருந்தனர். யாவே தம்மருளால் எகிப்திய அடிமைத் தளையில் இருந்து வியத்தகு முறையில் அவர்களை மீட்டார் என நம்பினர். நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்ற கருவில் மகிழ்ச்சியினதும், நன்றிப் பெருக்கினதும் வெளிப்பாடாக பாஸ்கா விழாவைக் கொண்டாடினர்.

## 1.3. புளியாத அப்ப விழா (The Feast of unleavened Bread)

புளியாத அப்பத்திருவிழா வி.ப 12:15 – 20 யில் குறிப்பிட்டு காட்டப்படுவதைப் போன்று அறுவடையின் விழாவாகக் கொண்டாடப்பட்டது. பயிரின் முதற்கனியை பரம்பொருளான இறைவனுக்கு அர்ப்பணிப்பதே இதன் மையச் செயற்பாடாகும் (லேவி 23:15). அர்ப்பணிப்பின் பொருளான அப்பத்தை நோக்காகக் கொண்டு விழாவின் பெயர் அமைக்கப்பட்டது. மீண்டும் மோசேயின் காலத்தில் இத்திருவிழா திரிபடைந்தது. அதாவது எகிப்திய அடிமைத் தளையிலிருந்து இறைவனின் வல்லமையால் மீட்படைந்ததற்கு நன்றியும் ஆராதனையும் செலுத்தும் முகமாக கொண்டாடும் வழக்கம் தோன்றியது.

எனவே மிகவும் அன்னியோன்னிய பிணைப்புக்களையும் ஒன்றமைந்த பண்புகளையும் கொண்ட இவ்விரு விழாக்களும் ஒருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணைக்கப்பட்டு தேர்ந்து கொள்ளப்பெற்ற இனமாகிய இஸ்ராயேல் லால் குழுமமாகக் கொண்டாடப்பட்டது. ஆகவே பின்வருமாறு இவ்விழாவை வரையறைப்படுத்தலாம். பாஸ்கா விழாவானது பலியோடிணைந்த திருவழிபாட்டு விழாவாகப் பரிணமித்து ஆராதனை உணவோடு முழுமையடைந்து எகிப்திய அடிமைத்தளையிலிருந்து இறையருளால் விடுவிக்கப்பட்டதை நினைவுகூர்ந்தும் வரவிருக்கும் விடுதலை வாழ்வை எதிர்நோக்கியும் தேர்ந்துகொள்ளப்பெற்ற இனமாகிய இஸ்ராயேலர் குழுமமாக இணைந்து கொண்டாடப்படு வதாகும்.

## உ. இரத்தத்தின் உடன்படிக்கை

சீனாய் மலை உடன்படிக்கை இஸ்ராயேலின் வரலாற்றின் மையக்கல்லாக அமைகின்றது. இது பாஸ்கா விழாவுக்கு அடுத்த படியான நிலையைப் பெறுகின்றது. இஸ்ராயேலர் எகிப்திய அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று ஏறக்குறைய மூன்று ஆண்டுகளாக பாலைநிலத்தில் பயணம் செய்து சீனாய் மலையை அடைந்தனர். அங்கே கடவுளோடு உடன்படிக்கை செய்து கொண்டனர் (தி.ப 24:4 – 10). இஸ்ராயேல் மக்களுக்கு இரத்தம் வாழ்வின் அடையாளமாகவும் (உ. ஆ 12:23) யாவேயையும் மக்களையும் ஒருங்கிணைக்கும் கருவியாகவும் செயல்படுகின்றது. பலிப்பீடம் யாவேயை குறித்து காட்டுவதால் செம்மறியின் இரத்தம் பீடத்தின் மேலும் மக்களின் மீதும் தெளிக்கப்படும்போது இருவருக் கும் இடையே புதிய உறவு பிறக்கின்றது. அன்பு, அமைதி, பிரமாணிக்கம் போன்ற பண்புகள் இவ் உடன்படிக்கையை அலங் கரிப்பதால் மூன்று வகையான பெயர்களில் நோக்கப்படுகின்றது.

அன்பின் உடன்படிக்கை
அமைதியின் உடன்படிக்கை
பிரமாணிக்கத்தின் உடன்படிக்கை

கடவுளின் நிபந்தனையற்ற அன்பிலிருந்து பிறந்த சீனாய் உடன் படிக்கை அவரது பிரமாணிக்கத்தால் கட்டிக்காக்கப்பட்டு அமைதிக்குள் வழிந்தோடுகிறது. உடன்படிக்கையின் உன்னத நோக்காக புலப்படுவது முதிர்ந்த பரஸ்பர குழும அன்பாகும். இருசாராரும் பரஸ்பர அன்பைப் பிராமாணிக்கத்தின் ஊடாக பகிரும்போது அமைதி ஊற்றெடுக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. புதிய ஏற்பாட்டின் படி நற்கருணை

இயேசுக்கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களுடன் பகிர்ந்த இறுதி இராவுணவை நான்கு நற்செய்திகளும் பாஸ்கா விருந்துடன் தொடர்புபடுத்தி நோக்குகின்றன. ஒத்தமை நற்செய்திகள் இறுதி இராவுணவை பாஸ்கா விருந்து என்று வெளிப்படையாகவும் (மாற் 14:12 – 16, மத். 26:17 – 19, 22:8 – 13) யோவான் பாஸ்கா விழாவுக்கு முந்திய இரவு இறுதி இராவுணவு நடைபெற்றது என்றும் கருத்துப்பட கூறுகின்றன. யோவான் இவ்வாறு கூறுவதற்கு இறையியலாளர்கள் பின்வரும் காரணத்தை கூறுகின்றனர். பாஸ்கா விழாவில் பலியிடப்படும் செம்மறியாக இயேசுவின் சிலுவைப் பலியை பொருத்திக்காட்டும் நோக்குடன் யோவான் பாஸ்காவுக்கு முதல்நாள் இயேசுவின் கடைசி உணவை விபரிக்கின்றார். தூய பவுல் இராவுணவு பாஸ்கா விருந்து பற்றி எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால் அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில் ..... என்று மட்டுமே கூறுகின்றார்.

## 4. யோக்கிம் ஜெரோமியாவின் கூற்று

இறுதி இராவுணவு பாஸ்கா விருந்து என்று ஐயப்பாடு நிறைந்த கருதுகோளுக்கு யோக்கிம் ஜெரோமியா என்ற இறையியல் வல்லுனர் பதினான்கு காரணிகளை துணையாகக்கொண்டு உண்மையாகவே இது பாஸ்கா விருந்து என நிருபிக்கின்றார். பல இறையியல் வல்லுனர் களால் ஏற்கப்பட்டுள்ள இவரது விளக்கங்களை சுருக்கமாகக் காண்போம்.

1. பாஸ்கா விருந்து எருசலேமில் உண்ணப்பட வேண்டும். இது யூத சட்டம். எனவேதான் இயேசு பல சவால்கள் மத்தியிலும் பெத்தானியாவில் இருந்து எருசலேமிற்கு வந்தார்.

2. பாஸ்கா விழாவைக் கொண்டாடுவதற்கு அமைவாகவே தேர்ந் தெடுக்கப்பட்ட மேல்மாடி அறை இருந்தது.

3. சாதாரண விருந்து மதியவேளையில் இடம்பெறும். ஆனால் இது இரவு இடம்பெற்றது.

4. தமது நெருங்கிய தோழர்களுடன் உணவை பகிர்ந்து கொண்டது பாஸ்கா விருந்துக்கு அமைவாகக் காணப்படுகிறது.

5. சாதாரண உணவு தரையில் அமர்ந்திருந்தே உண்ணப்படும். ஆனால் மேசையில் இருந்து பகிர்ந்தமை இதன் விசேட தன்மையை வெளிக்கொணர்கின்றது.

6. வழமையாக அப்பம் உணவின் ஆரம்ப வேளையில் பிட்கப்படும். ஆனால் இயேசு விருந்தின் இடை நடுவிலே அப்பத்தை பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தண்ணீர் அருந்துவதற்குப் பதிலாக இரசம் அருந்தினார்கள்.

8. இரத்தத்தின் அடையாளம் என வருணிக்கப்படும் சிவப்பு இரசமே அன்று பரிமாற்றப்பட்டது.

9. பாஸ்கா விழாவின்போது எதுவித வியாபாரமும் நடைபெறுவது யூத சட்ட முறைப்படி குற்றம். இதன் நிமித்தம் யூதாஸ் வெளியே செல்லும்போது அவர் ஏதாவது கொள்வனவு செய்யப் போகிறார் என ஏனையோர் எண்ணினர்.

10. யூத வழக்கப்படி தர்மம் செய்ய வேண்டும். எனவே தர்மம் செய்யவே அவர் போகிறார் என ஏனையோர் எண்ணினர்.

11. யூதர்களின் மரபுக்கு ஒத்த விதத்தில் பொருத்தமான திருப்பாடல் களைப் பாடியே தமது உணவை நிறைவு செய்தனர்.

12. பாஸ்கா விழாவின்போது எவரும் எருசலேமை விட்டு செல்ல முடியாது. இங்கு இயேசுவும் செல்லவில்லை. ஏனெனில் ஒலிவ மலை எருசலேமின் எல்லைக்குட்டபட்டதே.

13. பாஸ்கா விருந்தின்போது பிரயோகிக்கப்படும் வார்த்தைகளையே இயேசு இராவுணவின்போதும் அப்ப இரசத்தின் மீது பிரயோ கித்தார்.

14. பரிசேயர்களின் தூய்மையின்படியே அவர் தமது இராவுணவை அமைத்திருந்தார்.

மேற்கூறப்பட்ட விடயங்களை உசாத்துணையாகக் கொண்டு இயேசு அப்போஸ்தலர்களுடன் இறுதி இராவுணவின்போது பாஸ்கா விருந்தையே கொண்டாடினார் என பொருள் கூறலாம். நாம் இன்று கொண்டாடும் நற்கருணைப் பலி அன்று நடந்தேறிய இறுதி இராவுணவின் நினைவுகூரலாகும். இறுதி உணவு பாஸ்கா விருந்தாகும். எனவே இயல்பின்படி நற்கருணை பாஸ்கா விருந்தாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை:-

நற்கருணையின் விவிலியப் பின்னணியை ஆராயும்போது தந்தையாம் இறைவன் தம் திருமகன் கிறிஸ்துவை மீட்பின் பொருளாக அர்ப்பணித்து அதன் ஞாபகார்த்தமாக நற்கருணை என்னும் கொடையை ஏற்படுத்த வரலாற்று ரீதியாக செயல்பட்டு ஆயத்தப்படுத்தி வந்ததை காணமுடிகின்றது. இயேசுவும் தந்தையின் திருவுளத்தை ஏற்று தாமே பரிகாரப் பலியாகி, அதன் பொருளாக பாஸ்கா விழாவின் சடங்குப் பொருட்களை துணையாகக் கொண்டு நற்கருணையை ஏற்படுத்தினார். இங்கே அன்று காணப்பட்ட அன்பு, பிரமாணிக்கம், அமைதி ஆகிய பண்புகள் நிறைவடைந்து தமக்குரிய அர்த்தத்தை பெற்றுக்கொண்டன. அதுமட்டுமன்றி நற்கருணையில் இவை ஆழப்பதிந்துள்ளன. இதன் அடிப்படையில் நோக்கும்போது நற்கருணை முடிவில்லாத வாழ்வு நல்கும் அரும்பெரும் உணவாகி மீட்பை அருளுகின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் நற்கருணையின் தனிப்பெரும் மதிப்பீடுகளான அன்பு, பிரமாணிக்கம், அமைதி போன்றவற்றை கடைப்பிடித்து வாழ இயேசு அழைத்து நின்கின்றார். ஏனெனில் அவரே அனைத்துமாக இருக்கின்றார்.

அ. சூசைநாதன்
2ம் ஆண்டு
இறையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ சிறிய குழுமங்களும் தூய ஆவியும்

1960களில் லத்தீன் அமெரிக்காவில் கிறிஸ்தவ சிறிய குழுமங்கள் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன என்பதை மெடிலின் கொலம்பிய (Medelin 1968) ஆயர் அவைக் கூட்ட அறிக்கை வெளிக்காட்டியுள்ளது. நீதியும், சமாதானமுமாகிய முக்கிய கருத்துக்கள் அவ்வறிக்கையில் முக்கிய இடம்பெற்றுள்ளன. அரசியலில் வலுவற்றிருக்கும் சிறுபான்மைக் குடிமக்களை சமநிலைப்படுத்த திருச்சபையில் அடிப்படைக் குழுமங்கள் ஏற்படுத்துவது அவசியமாயிற்று. அவர்களது சூழலில் உள்ள இயற்கை வளங்கள் ஊடாக வளம்பெற வழிகாட்டுவது திருச்சபையின் பொறுப் பாகவும் உள்ளது.

சமூகத்தில் ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் விடிவுக்காக வலுப்பெற்ற இறைமக்கள் உதவிக்கரம் நீட்டுவது அவசியமானது. உரிமை இழந்த மக்கள் அதை மீளப் பெறவும் மனித மாண்புடன் அவர்கள் வாழவும் வழிகாட்டும் அமைப்புக்களின் ஒத்துழைப்பை நாடுவதும் இறைமக்களின் கடமையாகும். நீதிக்கும் சமாதானத்திற்கும் குரல்கொடுக்கும் ஆர்வமும் துணிவும் நிறைந்து விளங்கிய இலத்தீன் அமெரிக்க திருச்சபையின் வரலாற்றை மூன்று கட்டங்களாக நாம் நோக்கலாம்.

இவ்வளவு உரத்தோடு நீதிக்கும், சமாதானத்திற்கும் குரல் கொடுக்கும் துணிவும் அவாவும் இதற்கு எங்கிருந்து வந்தது என ஆராய்ந்து பார்க்க இலத்தீன் அமெரிக்க திருச்சபையின் வரலாற்றைச் சுருக்கமாக நோக்குவது நல்லது. இலத்தீன் அமெரிக்க வரலாறு மூன்று கட்டங்களாக நோக்கப்படுகிறது.

### முதலாவது கட்டம் :- அதன் ஆரம்ப காலனித்துவ நிலை

1492 தொடக்கம் 1808 வரை ஸ்பானிய அரசின் சுரண்டல்களுக் குள் அகப்பட்ட அமெரிந்திய சுதேச மக்கள், தங்கள் நிலமிழந்து, மனித உரிமைகளிலிருந்து, உடல் வலுவிழந்து, பல நோய்நொடிகட் குள்ளாகி மடிந்தொழிந்தனர். அவர்களின் ஒரே ஆறுதல்கள், சில மிசனெரிகளும் அவர்கள் ஸ்பானிய அரசுடன் நடத்திய உரிமைப் போராட்டங்களுமே.

இலத்தீன் அமெரிக்க திருச்சபை வரலாறு ஸ்பானிய தோட்ட எசமான்கள், வலுவிழந்த தங்கள் தோட்டங்களில் போதிய வேலையாட் கள் இல்லாமையால் ஆபிரிக்காவில் இறக்குமதி செய்த நான்கு இலட்சத்துக்குமதிகமான அடிமைகளின் வாழ்வு வேறொரு சோகக்கதை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாம் காலணித்துவ காலத்தின் பின் கட்டத்தில் ஏற்பட்ட அமெரிந்திய எதிர்ப்பியக்கங்கள், ஆபிரிக்க அடிமைப் புரட்சிப் போர்கள், கலப்பு இன தொழிலாளர் புரட்சிகள் ஊடாகக் காணலாம்.

## இரண்டாவது கட்டம் :-

ஸ்பானிய குடா பிரான்சிய படைகளால் ஆக்கிரமிக்கப்பட, இலத்தீன் அமெரிக்காவுக்கு விடுதலை கிட்டியது. (1808 தொடக்கம் 1870 வரை) இத்தேசிய விடுதலைக்கு முன் நின்றவர்கள் லத்தீன் அமெரிக்க நிலச் சுவாந்தர்களும், பெருந்தோட்ட முதலாளிகளும் அவர் பக்கம் சார்ந்த இராணுவத்தினருமே இப்புரட்சியின் பலன்களை அனுபவித்தனர். இப்புரட்சியின் பலாபலன்கள் மக்களிடம் பரவலாக சுவறவில்லை.

## மூன்றாம் கட்டம் :-

1870 தொடக்கம் 1930 வரை ஒரு புதிய தலைமுறை இலத்தீன் அமெரிக்காவில் தலைமை ஏற்றது. ஐரோப்பிய தாராளவாத சிந்தனைகள், பிரான்சிய புரட்சி, ஆங்கில தாராளவாத சிந்தனைகளால் ஊக்குவிக்கப்பட்ட சர்வாதிகாரிகள் தோன்றினர். இவர்களுக்கெதிராக மக்கள் இயக்கங்கள் எழுந்தன. ஆங்கில – பிரிட்டிஷ் மூல வள சந்தை மாறி, ஐக்கிய அமெரிக்காவின் பிடி பெருகிற்று. குடும்ப வாழ்வு, கல்வி, பக்தி முயற்சிகள் ஊக்குவிக்கப்பட்டு திருச்சபையில் புதுப்பித்தல் உருவாகியது.

1930களில் ஐரோப்பிய அமெரிக்க முதலாளித்துவத்திற்கு பொருளாதார அமுக்கம் ஒரு சவாலாகத் தோன்றியது. இலத்தீன் அமெரிக்க மக்களின் வாழ்வில் மார்க்சீய சிந்தனைகள் ஊடுருவின. 1930 – 1960க்குமிடையே வளர்ச்சியடைந்த பொதுவுடமைக் குழுக்கள், தொழிலாளர் சங்கங்கள், இளைஞர் இயக்கங்கள், கத்தோலிக்க சேவா இயக்கங்கள் 1959இல் வெடித்த கியூபா புரட்சிக்கு வித்திட்டன. இது தோற்றிய வெகுஜன இயக்கங்களுக்கே 'சேகுவேரா' முன்னோடியானார்.

1960கள் தொடக்கம் ஐக்கிய அமெரிக்காவில் எழுந்த பல மக்கள் புரட்சி இயக்கங்கள், ஐக்கிய அமெரிக்க CIA ஏஜென்சிகளின் துணையுடனும், அமெரிக்க விசேட இராணுவ பயிற்சியாளர்களின் உதவியுடனும் நசுக்கப்பட்டன. சில அமெரிக்க நாடுகளில் பிரபல கத்தோலிக்கரின் ஈடுபாடு அனைத்து உலகினதும் கவனத்தைக் கவர்ந்தது. சிறப்பாக கொலம்பிய நாட்டின் கமிலேரோறஸ், நிகராகுவா வின் கருதினால் ஏர்ணஸ்ரோ முன்னாள் குரு மாணவர் நெஸ்ரோபாஸ் முதலியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதம் தாங்காது அறவழியில் போராடியோரில் ரொம்கெல்ட் கமரா – பிரேசில், எல்சல்வடோர் ஒஸ்கார்ரொமோறா, நோபல் பரிசு பெற்ற பெறஸ் எஸ்கிவேல் என்போர் குறிப்பிடத்தக்கவர்.

இப்போராட்டங்களின் பின்னணியில் எழுந்தது தான் விடுதலை இறையியல். தத்தம் நாட்டின் நீதி, சமாதானத்திற்கான போராட்டத் திற்கு இரட்சணிய வரலாற்றினை புதிய, பழைய ஏற்பாடுகளை மண்மயமாக்கி உயிர் கொடுக்க விளைகிறது.

## சிறுசிறு குழுமங்கள் :–

ஏழை மக்கள் மட்டத்தின் கீழிருந்து எழும்புகின்ற இயக்கமே கிறிஸ்தவ சிறு குழுமங்கள். இவ் ஏழை மக்கள் பக்கமாக பரமபிதா சாய்வது போல திருச்சபையும் சாய்கிறது. அவர்களுக்காக இரத்தம் சிந்தும் இறைமகன் யேசு போன்று உயிர் கொடுக்க விரைந்து வருகின்றது திருச்சபை. அந்த ஆவி போன்று உயிர் ஊட்டி எலும்புக்கூடுகள் நிறைந்த பள்ளத்தாக்கை (எசே:31) உயிர்ப்பின் பிரதேசமாக நம்பிக்கை யூட்டுகிறது திருச்சபை.

இலத்தீன் அமெரிக்க திருச்சபை, (1) குருக்கள் ஏழைகளுக்கு கொடுக்கும் குருத்துவம் அல்ல. உதவி நிறுவனங்களிடமிருந்து ஏழை களாகிவிட்ட குருத்துவம். (2) பொது நிலையினரின் திருச்சபை (3) ஏழைகள், இளைஞர், தொழிலாளர், ஒதுக்கப்பட்டோர் தஞ்சமடையும் திருச்சபை.

## ஈழத்தில் இன்றைய நிலையில் ...

முழுமையாக அல்ல ஓரளவிற்கு அதே மூன்று கட்ட வரலாற்றுப் படிகளை எமக்குள்ளும் காணலாம். சற்று நீண்ட கட்ட அந்நியர் ஆட்சி 16ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை.

பெரும் விடுதலைப் போராட்டம் இன்றிக் கிடைத்த சுதந்திரத்தின் பின் வந்த அரசுகள், பிரித்தானிய அரசியல் அமைப்பு முறையின் கீழ் அதிகாரத்தை பரவலாக்காமல் ஏழை மக்களை பெரும் துன்பங் களுக்குள் தள்ளியமை, இதன் விளைவாக 1971லும் 1989லும் வெடித்த சிங்கள மக்கள் இளைஞர் புரட்சி – அதையும் சேகுவாரா புரட்சி ஒன்று, இரண்டு – என்றே அழைக்கின்றனர்.

அடுத்து அடக்கி ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பு, பதினெட்டு வருடப் போராக வடக்கு, கிழக்கில் தொடர்கிறது. இதன் விளைவு பெரும் துன்பங்களே. ஒரு நவீன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் பயங்கரங்கள் மத்தியில் அறுபதாயிரத்திற்கும் மேற்பட்ட மரணங்கள், இதைவிட அங்கவீனர், அனாதைகள், கைம்பெண்கள், பெருமளவு மக்கள் இடம்பெயர்வு, பஞ்சம் - பசி – பிணி – குடும்ப சீர்குலைவுகள் .... வடக்கு கிழக்கு ஏழைகளின் மண்..... இலத்தீன் அமெரிக்காவும் ஏழைகளின் மண்.

1960இல் இலத்தீன் அமெரிக்காவில் நிலவிய நிலைக்கு நாம் வந்தடைந்து விட்டோம். விவசாயம் வீழ்ந்துவிட்டது. கடற்றொழில் ஒழிந்து விட்டது. உணவுப் பொருட்கள், மருந்து வகைகட்குத் தட்டுப்பாடு. நிலம் பறி போகின்றது.

போராடும் லத்தீன் அமெரிக்க மக்கள் மீது ஐக்கிய அமெரிக்க, ஐரோப்பிய, சீன, இஸ்ரேலிய ஆயுத தொழில்நுட்பம் ஒன்றிணைந்து ஏற்படுத்தும் பேரழிவின் மத்தியில் 1930களில் இலத்தீன் அமெரிக்க திருச்சபை செய்த கல்வி, குடும்ப மேய்ப்புப் பணிகளையே செய்து கொண்டு போவோமா? அல்லது இப்பணிகளையே அர்த்தமுடன் நிறைவேற்ற முடியாத நிலையை இவ் ஈழப்போர் ஏற்படுத்தி விட்டதை சீக்கிரம் உணர்வோமா?

2000ஆம் யூபிலி ஆண்டிலே தூய ஆவியின் கொடைக்காக வேண்டுவோம். இன்று அகதிகளாக பிற சமயச் சூழலிலே விசுவாசம் கறையுண்டு, பலவித மூடக்கொள்கைகள், குருட்டுப் பக்திகளால் பாதிக்கப்பட்டு ஆதரிப்போர் இன்றியும் பல அடிப்படைவாதக் குழுக் களால் உளவியல் ரீதியாக அலைக்கழிக்கப்பட்டும், உற்றார் உறவினரைப் பிரிந்து இடம்பெயர்ந்தும், பரந்து சிதறுண்டு அலைவ துடன், உலகளாவிய நவீன கலாச்சாரத்தின் நுகர்வு வேட்கை வலைகளிலே இளைஞர்களும் யுவதிகளும் பரவலாக சிக்குண்டு பதற நவீன சக்திமிகு ஆயுதக் கலாச்சாரத்தால் வீடு வாசல் இழந்து நாடோடிகளான நிலையில் எமது மக்கள் உள்ளனர்.

எனவே "காலத்தின் அறிகுறிகளை உம் திருவுளத்திற்கேற்ப நாம் துய்த்துணர்ந்து இறை அரசை அறிவிக்க வேண்டிய ஞானத்தின் ஆவியைத் தந்தருளும்" என்று மன்றாடுவோம். தொடர்ந்தும் யூபிலி ஆண்டுச் செபத்திலே "நற்செய்திக்கு எதிரானவற்றை வெற்றி கொள்ளவும், உண்மைக்குச் சான்று பகரும் துணிவைப் பெறவும் திடமளிக்கும் ஆவியைத் தந்தருளும்" என்னும் கருத்தை மனதில் கொள்வோம். எனவே ஆவியின் தூண்டுதலுக்கேற்ப காலத்தின் தேவைக்கேற்ப பணிகளை மேற்கொள்ள ஞானத்தின் ஆவி எம்மை வழி நடத்தட்டும்.

– அருட்திரு. **J.E.** ஜெயசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியங்கள் மலரட்டும்

அன்பியங்களைப் பற்றி இன்று பலர் பரபரப்பாகப் பேசுவதுடன், பல விமர்சனங்களையும் அடுக்கிச்செல்வதை நாம் அவதானிக்கின்றோம். எது எப்படி இருப்பினும், திருச்சபையிலே காலத்துக்கு ஏற்ற வளர்ச்சியும், மாற்றங்களும் தோன்றுவது வழமை. தூய ஆவியாம் இறைவன் திருச்சபையை காலங்களுக்கேற்ப புதிய உத்வேகத்துடனும், புதுப்பொலிவுடனும் வழிநடத்திச் செல்லுகின்றார். திருச்சபை என்றும் புதிது. எனவே பயணிக்கும் திருச்சபைக்கு புதியவை புதுமையானவை மட்டுமல்ல புனிதமானதாகவும், அதன் வளர்ச்சிப் பயணத்திலே அழகு படுத்துபவையாகவும் அமைகின்றன. இதனடிப்படையில் அன்பியங்களும் எடுத்து நோக்கப்படுகின்றன.

அன்பியம் தோன்றிய வரலாற்றுப் பின்னணியை கூர்ந்து அவதானிக்கும் பொழுது பல்வேறுபட்ட சிந்தனைகள் நம்மில் மோதுவதை நாம் அவதானிக்கலாம். சமூக அநீதிகள் தோன்றுகின்றபொழுது போராட்டங்கள் தவிர்க்கமுடியாதவை. இது வரலாற்று உண்மை. அன்பியம் என்பது திருச்சபையிலே தோன்றியிருக்கின்ற ஒரு 'ஆன்மீகப் புரட்சி'. சமூகத்திலே தோன்றுகின்ற பல்வேறுபட்ட சமூக அநீதிகளை வன்செயல் மூலமாக தீர்ப்பதை விடுத்து, இறை வார்த்தையின் ஒளியிலே அப்பிரச்சினையைத் தியானித்து செபித்து, பலரும் பங்கேற்று, அப்பிரச்சினையைப் பகிர்ந்துகொள்வதின் அடிப்படையில் தான் இந்த அன்பியங்கள் தோன்றின. இதனால் தான் அன்பியத்தை ஆன்மீகப் புரட்சி என்று சொல்லுகின்றோம்.

'சென்று வாருங்கள் பூசை முடிந்தது' என்று திவ்விய பலிப்பூசையின் இறுதியில் குருவானவர் நம் வாழ்க்கைப் பலிக்கு வரவேற்புச் சொல்லுகின்றார். எனவே, திவ்விய பலிப்பூசை நம் அன்றாட வாழ்க்கைப் பலியாக்குகின்ற ஒரு வடிவம்தான் அன்பியம். சில சந்தர்ப்பங்களில் சிலர் 'அன்பியம்' இன்னொரு வழிபாட்டு முறை என நினைத்து வழிபாட்டோடு (மாற்கு 7:6 – 8) மட்டும் அன்பியத்தை முடித்து வைக்கின்ற பொழுது அன்பியம் தன் உண்மையான இலக்கை இழந்து விடுகின்றது.

அன்பியம் - அன்பை இயம்பும், அகம் - நம் இதயம், நம் வீடு, நம் சமூகம், நம் பங்கு இவைதான் அன்பின் இயங்களாக மாற அழைக்கப்படுகின்றன. அன்பிற்கான ஏக்கமும், தேவையும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் அன்பியத்தினூடே ஒவ்வொரு கிறிஸ்தவனும் அன்பைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர அழைக்கப்படுகின்றான். இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது அன்பியத்தின் அடிப்படையான விவிலிய வழி வாழ்வு.

இறைவார்த்தை இருபக்கமும் கூரிய வாளுக்கு ஒப்பானது. இறை வார்த்தை நம் உள்ளங்களைத் தொடுகின்றபொழுது, மரத்துப்போன நம்முடைய இதயங்கள்கூட இதமாக்கப்படுகின்றன. இந்த அனுபவத்தை அன்பிய வேதாகமப் பகிர்விலே நாம் சுவைக்கின்றோம். வேதாகம வார்த்தைகளை தங்கள் வாழ்க்கையோடு இணைத்து செபிக்கின்ற பொழுது பலர் கண்ணீர் வடித்து அழுவதையும், 'என் வீடு தேடி வந்த ஆண்டவர்' என்று உள்ளம் உருகிச் செபிப்பதையும் பார்க்கும்பொழுது இவ்வுண்மை நன்கு புலனாகும். மற்றும் வழிபாட்டின் இறுதியில் இடம்பெறுகின்ற உணவுப்பரிமாற்றமும், உறவுப்பரிமாற்றமும் (ஒருவரை யொருவர் அக்கறையோடு விசாரித்தல்) இவ் அனுபவத்துக்கு வலுச்சேர்க்கின்றன (மத். 18:20).

பயணம் செய்கின்ற திருச்சபையிலே பொது நிலையினராகிய நாமனைவரும் பங்கேற்கின்ற திருச்சபையாக இருந்து செயலாற்றவும், உலகின் உப்பாகவும், புளிக்காரமாகவும், ஒளியாகவும் (மத் 5:13 – 16) இருந்து செயற்பட ஒரு பணிக்களமாகவும் அன்பியம் அமைகின்றது. இன்று நம்முடைய பங்குக்கோவிலைச் சுற்றி அன்பியங்கள் குழுவாக வும், வலயங்களாகவும் இருந்து செயற்படுவது நம் பங்குக் கோவிலுக்கும், ஏன் முழு பங்குக்கும் அரணாக அமைகின்றது. ஆலய வழிபாடுகளிலும் சரி, பங்கின் ஏனைய பணிகளிலும் சரி அன்பியங் களாக இருந்து புதுப்பொலிவுடனும், உத்வேகத்துடனும் செயற்படுவது நமக்கெல்லாம் புதிய உற்சாகத்தைத் தருகின்றது.

இன்னும் ஒருபடி மேலே சென்று, பல காலங்களாகியும் சீரமைக் கப்படாமல் எஞ்சியிருக்கும் நம் கிறிஸ்தவ வாழ்வின் விழுமியங்கள் இறைவார்த்தையின் ஒளியிலே மறுசீரமைக்கப்பட்டு வாழப்பட வேண்டும். கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையான புண்ணியங்களான அன்பு, மன்னிப்பு, பகிர்வு போன்றவை அன்பியங்களின் ஊடாக மலர்ந்து, மணம்வீச வேண்டும் என்பதே என்னுடைய பேரவாவாகவும், பிரார்த் தனையாகவும் இருக்கின்றது. அதாவது அன்பியங்களின் வாழ்வாக இருக்கின்ற ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்வு (தி.தூ. 2, 4) மீண்டும் ஒருமுறை அன்பியங்களின் ஊடாக நம் பங்குத் திருச்சபையிலே வாழப்பட வேண்டும் இதைத்தான் நான் அன்பியங்களின் இலட்சியம் என்று சொல்லுவேன்.

மனித ஈடுபாடு இருக்கின்றபொழுது குறைபாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதவை. இதனடிப்படையில் அன்பியத்திலும் தவிர்க்க முடியாமல் சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக வழிபாட் டோடு நிறுத்தி விடுதல், ஒன்று சேர்வதிலே ஏற்படுகின்ற தாமதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை. இருப்பினும் இவை சீர்செய்யப்படக் கூடியவை. மாறாக, அன்பியங்கள் வேலை இல்லாதவர்களுக்கு மட்டும், அன்பியம் ஏமாற்று வேலை என்ற வார்த்தைகள் வேண்டாத, வேதனைக்குரிய விமர்சனங் களாகும். மேலும், அன்பியத்தை வழிநடத்துபவருக்கு விவிலிய அறிவு போதாது என்றும் ஒரு விமர்சனம் நிலவுகின்றது. இதுவும் தவறு. காரணம் குழுவை ஒன்றிப்பது இறை வார்த்தை, வழி நடத்துவது தூய ஆவி, இக்குழு வாழ்வது இறை வார்த்தையைப் பகிர்ந்துகொள்வ தாலேயே. இருப்பினும், இங்குதான் பங்குக்குருவானவர் குழுத்தலை வருக்கும், ஏனையோருக்கும் வேதாகம அறிவூட்டி, தலைமைத்துவ பயிற்சியளித்து வழிநடத்த அழைக்கப்படுகின்றார்.

இறுதியாக நம் எல்லாப்பங்குகளிலும் அன்பியங்கள் மலர்ந்து மணம் வீசட்டும். நம் பங்குத் திருச்சபையிலே பங்கேற்கும் திருச்சபை உதயமாகட்டும். அப்பொழுது நம் பங்கிலே மீண்டும் ஒருமுறை 'ஆதித்திருசபையின் வாழ்வு' புதிய உத்வேகத்துடன் வாழப்படும். இதுவே நாம் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் விண்ணரசின் முன்சுவை. (மத். 10:7).

அருட்திரு. செ. அந்தோனிமுத்து அ.ம.தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய எம் வழிபாடுகள் அர்த்தமுள்ளவையா ?

## மனநிலைகள்:-

எம் அன்றாட வாழ்விலே ஆலயங்களிலோ, பொது இடங்களிலோ, வீடுகளிலோ வழிபாடுகளை நாம் நடாத்துகின்றோம். இவற்றில் நாம் பங்குபற்றும்போது எந்த மனநிலையுடன் பங்குகொள்கின்றோம்? என்பது கேள்விக்குரியதே. வழிபாட்டிற்கு நாம் வருகின்றபோது இறை மக்கள் ஒரே குடும்பமாக அங்கே இணைகின்றோமா? கோபதாபங் களோடும் வேற்றுமைகளோடும், போட்டி பொறாமைகளோடும் செல்வோர் பலர். சிலர் தம்மிடம் மிகுதியான செல்வம் உண்டு எனக்காட்ட அன்றைய நாளை பயன்படுத்த நினைக்கின்றனர். வேறு சிலர் வறுமையோடும் வெறுமையோடும் இறைவனைக் காண அவரோடு ஒன்றிக்க நினைக்கின்றனர். இன்னும் சிலர் வேடிக்கை பார்க்கவும், விமர்சனம் செய்யவும், உடுப்புப் பார்க்கவும், சிரிக்கவும் செல்கின்றனர். இவ்வாறான பல மனநிலைகளோடு இன்றைய சூழ்நிலையில் இறை மக்கள் நாம் வழிபாடுகளில் கலந்துகொள்கின்றோம். வழிபாடு என்பது எம் வாழ்வோடு இணைந்த ஒன்று என்பதனை நாம் பல தடவைகள் மறந்துவிடுகின்றோம். ஒரு திருப்பலியில் பங்கெடுக்க நாம் செல்கின்ற போது என்ன மனநிலையுடன் செல்கின்றோம் என்பது சிந்திக்கப்பட வேண்டிய விடயம். ஞாயிறு திருப்பலிக்கு கட்டாயம் போகவேண்டும் என்ற மனநிலையுடன்தான் எம்மில் பலர் செயற்படுகின்றோம்.

## வழிபாட்டில் எம் செயற்பாடுகள்:-

வழிபாட்டில் பூசைக்கு செல்கிறோம் என்று சொல்லிக் கொண்டு கால்பூசைக்கும் அரைப்பூசைக்கும் போகின்றவர்கள் பலர். மன்னிப்பு இறைவார்த்தைப் பகுதிகள் முடிந்து விடுகின்ற நேரத்தில் சென்று மன்றாட்டிலும், காணிக்கையிலும் பங்குபற்றி விட்டு நற்கருணையை எவ்வித ஆயத்தமோ பக்குவமான மனநிலையோ இல்லாமல் பெற்றுவிட்டு வீட்டிற்குச் செல்கின்றோம். இது முழுத்திருப்பலியில் பங்கெடுப்பதற்குச் சரியா? சிலர் திருப்பலிக்கு நேரத்துடன் வருகின்றார்கள் பிரசங்கம் கூறும் நேரம் வந்ததும் போட்டிக்கோவின் வெளிப்புறத்திலோ அல்லது ஆலய வெளிவாயிலையோ நாடிச் சென்று விடுகின்றனர். சிலவேளை பிரசங்கம் நடைபெறும்போது எம்மிடையே குசுகுசு மந்திரம் ஓதுகின்றோம். எங்கையோ பராக்குப்பார்த்துக் கொண்டு நிற்கின்றோம். சிறுபிள்ளைகள் தம்மிடையே விளையாடத் தொடங்கி விடுவார்கள். நுள்ளுப்பட்டு, இடிபட்டு தங்கட வேலைகள் செய்வார்கள். இவ்வாறான செயற்பாடுகள் சரியானவையா? அங்கே குருவானவர் பிரசங்கம் யாருக்குக் கூறுகின்றார்? எதற்காகக் கூறுகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்? ஆவியானவரின் செயற்பாட்டை நாம் குருவின் மூலம் கண்டு கொள்கின்றோமா? இறைவன் வெளிப்படுத்துவதை கேட்கின்றோமா? சிந்திக்க வேண்டும்.

இன்னும் பலர் எம்மிடையே ஆலயத்திற்கு வருவார்கள், வாய் திறந்து செபங்களிலோ, பாடல்களிலோ பங்குகொள்ளமாட்டார்கள். ஆனால் காணிக்கைப் பவனி இடம்பெறும்போது நடந்து சென்று காணிக்கை கொடுப்பார்கள். ஆமென் கூடச்சொல்ல வாய்வரமாட்டாது. நற்கருணை பெற்றுக்கொள்வோம். சிலவேளை நற்கருணை பெற்ற உடனுமே வீட்டிற்குச் சென்றுவிடுவோம். யூதாசைப் போல் அப்பத்தைப் பெற்றவுடனுமே வெளியேறி விடுகிறோம். சிலர் நற்கருணை பெற்ற வுடனும் புனிதர்களிடம் வேண்ட புத்தகத்தோடு அமர்ந்து விடுவார்கள். இவையெல்லாம் வழிபாட்டில் பங்குகொள்ளும் இலட்சணங்களா? இவ்வாறான செயற்பாடுகள் அர்த்தமுள்ள வழிபாடாக அமையுமா?

உண்மைச் சம்பவம் ஒன்று :-

ஒரு ஆலயத்தில் திருப்பலிக்குச் சென்றிருந்தேன். வழிபாட்டின் இறுதியில் நற்கருணை விருந்துப் பகுதி வந்ததும் எல்லோரும் இரு மருங்கிலும் இருந்து கலந்துகொண்டோம். ஒரு அம்மாவுக்கு குருவானவர் நற்கருணை கொடுக்க மறந்து சென்றுவிட்டார். தவறு தலாக விடப்பட்ட ஒன்றுதான். குருவானவர் பீடத்திற்கு ஏறிவிட்டார். அந்த அம்மா பெரிய சத்தமாக பேசத்தொடங்கிவிட்டார். 'இந்த சுவாமி எனக்குத் தராமல் போகுது பார் கண் தெரிய இல்லையோ உதுக்கு ஆட்கள் இருக்கிறத பாக்கிறது இல்லையோ'.... எண்டு கனக்க பேசினா, இது குருவானவரின் காதில் விழுந்து விட்டது போல அவர் உடனுமே திரும்பி வந்து அந்த அம்மாவுக்கு நற்கருணை கொடுத்துவிட்டுச் சென்றார். நற்கருணை எடுத்த அந்த அம்மா அதை தகுதியான முறையில் உட்கொண்டாவோ என்னவோ மீண்டும் பேசத் தொடங்கிவிட்டா. நன்றிப்பாடல் இடம்பெறுகின்றது. அந்த அம்மாவின் முணுமுணுப்பும் கேட்கிறது. அந்த நிகழ்வில் சிரித்தார்கள் பலர். எனக்கு அது வேதனையாக இருந்தது. எந்த மனநிலையோடு நாங்கள் நற்கருணையை உட்கொள்ள நினைக்கின்றோம். அந்த ஒரு அம்மா வினால் இறுதி வழிபாடு குழம்பிப் போய்விட்டது. நாம் நற்கருணையை சாதாரண ஒரு உணவாக உட்கொள்ள நினைக்கின்றோமா? அல்லது கிறிஸ்துவை உண்மையிலே உட்கொள்கின்றோமா? இது என் இதயத்தில் எழுந்த பெரிய கேள்வி.

இவ்வாறான மனநிலைகளோடும், இடையூறுகளோடும் நாம் எப்படி முழு வழிபாட்டில் பங்கெடுத்தோம் எனச் சொல்ல முடியும்? பாடகர் குழாம் தங்கட போக்கில பாடல்களைப் பாடுவார்கள். வழிபாடு நடத்துகையில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றால் உடனும் சிரிக்கின்றார்கள். பக்கத்தில சுறண்டி கதைக்கின்றார்கள். இவ்வாறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் அர்த்தம் உள்ளவையா? ஏன் ஒரே மனத்தோராய் நாம் வழிபாட்டில் ஒன்று கூடக்கூடாது? எல்லோரும் இணைந்து பங்குகொள் ளும் வகையில் எம் செயற்பாடுகள் அமைகின்றனவா? சிந்திப்போம்.

எனவே வழிபாடு என்பது இறைமக்கள் அனைவரும் ஒன்றுகூடி நடத்துகின்ற ஒரு கொண்டாட்டம். இது வெளி ஆடம்பரக் கொண்டாட்ட மாக அமைந்துவிடாது ஆன்மீகக் கொண்டாட்டமாக அமைய வேண்டும். நாம் முழு உள்ளத்தோடும், இறை உணர்வோடும் இறை வனைப் புகழ்ந்து ஆராதித்து நன்றி செலுத்தவேண்டும். தனி ஒருவர் மட்டும் பங்குபற்றுவது வழிபாடல்ல. இறைமக்கள் எல்லோரும் ஒன்று கூடுகின்றோம், செயற்படுகின்றோம். ஆதலால் ஒருவருக்கு ஒருவர் இடையூறாக அமைந்து விடாவண்ணம் எங்களுடைய வழிபாடுகள் அமையும்போது தான் அவை அர்த்தமுள்ள வகையில் அமைய வாய்ப்புண்டு. வேறு மகிழ்வளிக்கும் கொண்டாட்டங்களுக்கு செல்கின்ற மனநிலைகளோடு நாம் வழிபாட்டுக் கொண்டாட்டத்திற்குச் செல்லக் கூடாது. வழிபாட்டில் எல்லோரும் சேர்ந்து பங்குபற்றும் வகையில் ஒவ்வொரு செயற்பாடும் அமையவேண்டும். விமர்சனங்களும், சிரிப்புக் களும், வேறு பக்தி முயற்சிகளும் வழிபாட்டின்போது தவிர்க்கப்பட வேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்களுடைய வழிபாட்டுமுறை எம்மிலும் மிளிர வேண்டும். இதனைத் திருநிலையினரும் பொதுநிலையினரும் கருத்தில்கொண்டு வழிபாட்டில் முழுமையாக பங்கெடுக்கவும், மற்றவர் களையும் பங்குபற்றத் தூண்டும் வகையில் எம் வழிபாடுகள் அமையும் போதுதான் அவை அர்த்தமுள்ளவையாக அமைய முடியும்.

செல்வி. து. டெனி
மானிப்பாய் பங்கு,
மல்வம், உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா நற்செய்தியின் அனைத்துத் தன்மை - ஓர் குறுகிய ஆய்வு

லூக்கா நற்செய்தி "வரலாற்று இயேசுவின்" வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை எல்லாம் ஒன்று சேர்த்து, செய்திகளைத் தொடர்பாகத் தொகுத்துக் கோர்வையாகப் பிணைக்கப்பட்ட ஒரு "வரலாற்று நற்செய்தி" நூலாக விளங்குகின்றது (1/1 –4). நான்கு நற்செய்தியாளரும் கிறிஸ்துவின் நற்செய்தியை தங்களது இறையியல் நூலில் அளிக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரும் எழுதும் நடை, இறையியல் வேறுபட்டது. இதன்படி லூக்காவும் சில கருத்துக்களைத் தமக்கே உரிய முறையில் கூறுகிறார். குறிப்பாகக் கூறுவதாயின் மனித இனம் முழுமைக்கும் மீட்பு, ஏழைகள் சார்புத்தன்மை, வரலாற்றியல் தன்மை, பெண்கள்பால் அக்கறை என்பன மட்டுமன்றி லூக்காவின் அனைத்துத்தன்மை அல்லது பொதுத்தன்மையும் இந்நூலில் ஒன்றித் துக் காணப்படுவதோடு பரந்தும் காணப்படுகிறது. இதுவே லூக்காவின் மையக்கோட்பாடாகவும் திகழ்கிறது, என்று நாம் கூறுவதில் தவறேதும் இல்லை.

லூக்காவின் நூல் உலகினர் யாவர்க்கும் இறைவன் அளித்த மீட்பின் நற்செய்தியாகும். அதன் வழியாக யாவர்க்கும், அதாவது மனித இனம் முழுமைக்கும் மீட்பு அளிக்கப்படுகின்றது. இதுவே லூக்கா நற்செய்தியின் "அனைத்துத்தன்மையின்" சிறப்பான கருத்தாகும். இவர் தனது நூலை புறவினத்தார்க்கு எழுதுகின்றார். இதன்மூலம் மீட்பு யூதர்களுக்கு மட்டுமே உரியதொன்றன்று, மாறாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் எவனும் மீட்பைப் பெறமுடியும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி நிற்கிறார் (2/32). இயேசுவின் நற்செய்தி, அவரது உறவு, அவரது வல்லமை யாவர்க்கும் உரியது. இயேசு ஏழைகள், எளியவர்கள், புறவினத்தவர்கள், பாவிகள் ஒடுக்கப்பட்டவர்கள், வரி தண்டுபவர்கள், நோயாளர்கள், பெண்கள், சமூகத்தில் இருந்து புறம் பாக்கப்பட்ட தொழுநோயாளர்கள் யாவர்க்கும் இறை அன்பை வெளிப்படுத்துவதை லூக்கா காட்டுவது லூக்காவின் "அனைத்துத் தன்மையை" அல்லது பொதுத்தன்மையைத் தெளிவுபடுத்துகின்றது.

லூக்கா எழுதிய நூலை எளியோருடையவும் ஏழைகளுடையவும் தாழ்ச்சியுடையோருடையவும் நற்செய்தி எனவும் குறிப்பிடலாம். ஏனென்றால் இவரது நற்செய்தியில் ஏழை, எளியோர் சிறப்பித்துக் கூறப்படுகின்றார்கள். "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள்" என்று ஏழைகளை சிறப்பிக்கின்றார். அத்தோடு ஏழைகளுக்கும், இயலாதவர் களுக்கும் மனத்தளவிலும் செயலளவிலும் இரங்குதல் வேண்டும் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நூலில் கூறி நிற்கின்றார். எளியோருள் பெண்களும் அடங்குவர். லூக்கா தனது நூலில் பெண்களிற்கு தனிச்சிறப்பும், முக்கியத்துவமும் அளிக்கின்றார். மற்றைய நற்செய்திகளில் காணப்படுவதை விட இந் நூலில் பெண்கள் பலர் சிறப்புடையோராய்க் காட்சியளிக்கின்றனர். இயேசுவின் தாயாகிய மரியாளைப் பற்றிய நிகழ்ச்சிகள் (1:26 – 2:56), நயீமைச் சார்ந்த விதவை (7:11 – 17), மன்னிப்பு வேண்டும் பெண்மணி (7:36 – 50), மார்த்தாளும் மரியாளும் (10:38 – 42), கோவிலிலே திருப்பணி புரிந்த அன்னா (3:36 – 38), இன்னும் இயேசுவுக்குப் பணிவிடை செய்த பெண்களைப் பற்றிய நிகழ்ச்சிகளை இந்நூலில் காணலாம். லூக்கா தனது நூலில் பெண்களுக்கு சிறப்பிடம் அளிப்பது அவரது நூலின் "அனைத்துத்தன்மையின்" ஒரு சிறப்புப் பகுதியாகும்.

லூக்கா நற்செய்தியின் அனைத்துத் தன்மையின் மற்றொரு சிறப்பான அம்சமாகவிருப்பது பாவிகள்மேல் காட்டிய இரக்கமாகும். இயேசுவின் இரக்கத்தை இந்நூலில் வரும் மன்னிப்பு நிகழ்ச்சிகளில் காணலாம். இயேசு பாவிகளை வெறுக்கவில்லை. மாறாக அவர்களிடம் அன்பும் இரக்கமும் கொண்டார் என்பதை பின்வரும் நிகழ்ச்சிகளில் கூறப்பட்டுள்ள செயற்பாடுகள் வாயிலாக அறியலாம். பாவியான பெண் (7:36 – 50), காணாமல் போன மகன் (15:11 – 32), சக்கேயு (19:1 – 10), நல்ல கள்வன் (23:39 – 43), இவ்வாறு இயேசுவை, பாவிகளை மன்னித்து இரக்கம் காட்டி அவர்களைத் தமது நண்பர்களாக்குவதாகக் காட்டுவது லூக்காவுக்கு மட்டுமேயுரிய அனைத்துத் தன்மையின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். எல்லோருக்கும் மீட்பு என்பதன் உறுதி நிலையாகும்.

"இழந்து போனதைத் தேடி மீட்கவே வந்தேன்" (19:10) என்பதும் "மனந்திரும்புதல்" என்ற சொற்றொடரும் லூக்கா நூலில் மட்டுமே காணப்படுகிறது. இதன்மூலம் லூக்கா ஏனைய நற்செய்தியாளர்களை விட இறைவனின் இரக்கத்தைப் பற்றி தனது நூலில் சிறப்பாக கூறுவதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. லூக்கா நற்செய்தி யில் கொடூரமான, கடுமையான சொற்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு இயேசுவின் இரக்கத்தை லூக்கா உறுதியாக எடுத்துக்கூறும் தன்மை மென்மேலும் இந்நற்செய்தியின் பொதுத்தன்மையை உறுதிப் படுத்துகின்றது.

அடுத்து லூக்காவின் மூதாதையர் அட்டவணை (3:23 – 38) ஆபிரகாமோடு முடிவடையாது அது ஆதிமனிதன் ஆதாம் வரை செல்வது, லூக்கா நற்செய்தி யூத, மத, இன பண்பாட்டைத் தாண்டி அனைத்துலகிற்குமே உரியது என்பதையும், இயேசுவே புதிய ஆதா மாகி, யூத எல்லைகளைத் தாண்டி புது உலகைப் படைத்தார் அல்லது உருவாக்கினார் என்பதையும் சுட்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்தியாளரில் லூக்கா மட்டுமே ஆதிக்கிறிஸ்தவர்கள் பயன் படுத்திய கிறிஸ்தியல் பொருள்படும் "ஆண்டவர்" என்ற வார்த்தை யைப் பயன்படுத்துகின்றார் (1:43, 2:12, 5:8, 6:5). இச்சொல்லின் வழியாக கிறிஸ்துவே மீட்பர் என்று சுட்டிக் காட்டுகின்றார். அதாவது கிரேக்கர்கள் விளங்கிக்கொள்ள முடியாத, யூதர்கள் மட்டுமே விளங்கிக்கொள்ளக் கூடிய கிறிஸ்து அல்லது மெசியாவின் கருப் பொருளை அல்லது சிந்தனையை புறவினத்தவர்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் குறிப்பாக உரோமையர்கள் (Lord) "ஆண்டவர்" என்று தங்கள் பேரரசை இறைபிரதிநிதியாக ஏற்பதை மையப்படுத்தி இயேசுக் கிறிஸ்துவே இறைமகன், ஆண்டவர், மெசியா என்று எண்பிக்கின்றார் (1:32 – 33, 19:12, 28, 22:28, 67, 23:40). மேலும் உரோமையரின் பேரரசர் உரோமையருக்கு மீட்பராகவும் (Saviour) இருப்பது மென்மேலும் இயேசுவின் இறைமீட்புத் தன்மையை எண்பித்து புறவினத்தவருக்கும் அவ்விசுவாசத்தைக் கொடுத்து நிற்கின்றது. இப்படி புறவினத்தவருக்கும் இயேசுவின் மீட்பை ஆழமாகக் கொடுத்து அதை அனுபவிக்க வைத்து நிற்பது லூக்காவின் அனைத்துத் தன்மையான பரிமாணத்தை மேலும் அதிகரிக்கின்றது.

லூக்காவின் அனைத்துத் தன்மை பற்றி நாம் மேலும் ஆய்வு செய்யும் முகமாக மத்தேயுவின் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் மேற்கோள்காட்டலிலிருந்து, லூக்காவின் பழைய ஏற்பாட்டுப் பகுதிகள் மேற்கோள்காட்டல் சற்று விசேடத் தன்மை வாய்ந்தவை என்பதையும் ஆராயலாம். மத்தேயு முற்றுமுழுதாக யூதக்கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே விளங்கக்கூடிய வகையில் எபிரேயச் சொற்கள் அடங்கிய பகுதியை அப்படியே அடிக்கடி மேற்கோள்காட்ட, லூக்கா பழைய ஏற்பாட்டின் பகுதிகளையும் சொற்களையும் புறவினத்தாரும் விளங்கிக் கொள்ளும் வகையில், இலகு நடையில் தேவைக்கேற்ப சுட்டிப்பாக மேற்கோள்காட்டுகின்றார். இத்தகைய பண்பு லூக்கா நற்செய்தி யாளரின் அனைத்துத் தன்மைக்குச் சான்றாக அமைகின்றது.

அடுத்து இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி லூக்கா குறிப்பிடுகையில், உயிர்த்தெழுதலின் முழு நம்பிக்கையற்ற சிந்தனைப் பாங்குடைய கிரேக்கர்களுக்கு, இயேசு உயிருடன் இருக்கிறார் என்ற கருத்துருவாக்கத்தை "அவர் உயிர்த்து விட்டார்" (24:6) என்று கூறுவதனூடாகப் புரிய வைப்பது லூக்காவின் நற்செய்தி எந்த அளவிற்கு யூத, இன, மத எல்லையைக் கடந்து புறவினத்தாருக்குரிய "அனைத்துத்தன்மை" வாய்ந்தது என்பது தெளிவாகிறது.

மேலும் லூக்கா செபம், துறவு, ஆவியின் செயற்பாடு என்பவற் றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றார். இயேசு தனது வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் செபித்திருக்கிறார். [ஞானஸ்தானத்தின்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3:21), அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் (6:12)], பாடுகளின் முன் (22:39). செபத்தின் தேவையை புறவினத்தவர், பாவிகள், ஏழைகள், நோயாளர், ஒடுக்கப்பட்டவர் உட்பட அனைவரும் உணருவதற்காகவும், அனைவரும் அதைப்பற்றி இலகுவாக விளங்கிக் கொள்வதற்காகவும், "தொந்தரை செய்யும் நண்பன்" (11:5 – 8) உவமை, பொல்லாத நடுவன் (18: 1- 8) உவமை, போன்றவை களைக் கையாண்டு தான் கூற விளையும் செய்தியை அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அதாவது "அனைத்துத்தன்மை" வாய்ந்ததாகக் கூறி நிற்பதை நாம் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு லூக்கா நற்செய்தியின் "அனைத்துதன்மை" அவருடைய நற்செய்தி உருவாக்கத்தில் யூதமொழி, இனம், மதம், பண்பாடு என்பவற்றைக் கடந்து, புறவினத்துக் கிறிஸ்தவர்களுக்கும் உரிய பாணியில் கிரேக்கம் தழுவிய வகையில் இன்னும் யூத சமூகத்தி லிருந்து ஒடுக்கப்பட்ட ஏழைகள், அடிமைகள், பாவிகள், வரி தண்டுவோர், இன்னும் பெண்கள், சிறுவர்கள் எல்லோரையும் சார்ந்து இருப்பதில் தெளிவாகிறதென்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

லூக்காவின் குழுமம் (கிரேக்க அந்தியோக்கியா, பிலிப்பி) புறவினத்தவர்களைச் சார்ந்திருப்பதும் அதிலும் மேலாக லூக்காவே ஒரு புறவினத்தவராக இருப்பதால் அவரது நற்செய்தி உருவாக் கத்திலே அவரது பண்பாடு, சிந்தனை, மொழி, நடை, இறையியல் கருப்பொருள் உருவாக்கம் போன்றன "அனைத்துத் தன்மை" சார்ந்ததாக இருப்பதில் எதுவித சந்தேகமோ, ஆச்சரியமோ இருப்பதற்கில்லை.


<u>Bibliography</u>

1) NJBC
2) How to read N.T.



செல்வி செங்கோல் யூலியா
சென். ஆன்ஸ்
மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்
# கேள்வி – பதில்

செல்வி. ஆர். ஜெயந்தி
மருதடி வீதி
யாழ்ப்பாணம்

கேள்வி : நற்கருணையில் நாம் கிறீஸ்துவின் உடலை உண்பது நர மாமிச உண்ணல் (Cannibalism) என்று சிலர் குற்றம் கூறுகிறார்களே, இது சரியா? இப்படிச் சொல்பவர்களுக்கு நாம் என்ன பதில் கூறலாம்?

நற்கருணையில் நாம் கிறீஸ்துவின் உடலை உண்பது நர மாமிச உண்ணல் (Cannibalism) அல்ல. நீங்கள் கூறும் இக்குற்றச்சாட்டு இன்று நேற்று மட்டும் எழுந்ததொன்றல்ல. கிறீஸ்து தான் ஏற்படுத்திய நற்கருணையைப்பற்றி தன் சீடர்களுக்கு எடுத்துக் கூறியபோதே பலர் இதை ஏற்க மறுத்தார்கள். "என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடித்தாலொழிய உங்களுக்கு உயிர் இராது. என் தசையைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான்" என்று கிறீஸ்து போதித்தபோது, "இது மிதமிஞ்சிய பேச்சு இதை யார் நம்புவார்" என்று கூறிக்கொண்டு பலர் இயேசுவை விட்டு பிரிந்து சென்றார்கள் என்று யோவான் நற்செய்தியில் வாசிக்கிறோம் (காண்க. யோவா: 6 : 51 - 65).

இதற்கு நாம் பதில் கூறவேண்டுமென்றால் முதலில் நரமாமிச உண்ணல் என்றால் என்ன என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். நரமாமிச உண்ணல் என்பது மனிதனை மனிதன் உண்பது ஆகும். ஆனால் இறந்துபோன, உயிரற்ற மனிதனைத்தான் இன்னொரு மனிதன் உண்கிறான், உண்ணமுடியும். உயிரோடு ஒரு மனிதனை உண்ணமுடியாது. உயிரோடுள்ள ஒரு மனிதனின் ஒரு அவையவத்தை வெட்டி உண்ணும்போதுகூட அவ்வவையம் இறந்ததாகவே இருக்கின்றது.

மனிதன் மனிதனை உண்பதற்குக் காரணங்களும் உண்டு. தங்கள் பொற்றோருடைய இறந்த உடல்கள் அழிந்துபோய் மண்ணோடு மண்ணாக கலப்பதை விரும்பாமல், பிள்ளைகள், அவர்கள் அழியாமல் தொடர்ந்தும் தங்களில் வாழ்கின்றார்கள் என்ற உணர்வோடு அவர்களை உண்டு திருப்தியடைகிறார்கள். ஒரு வீரமுள்ள மனிதனை உண்டால் அவனுடைய வீரம் தமக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உண்கிறார்கள். ஒருவனுடைய குணாதிசயங்களை பெற்றுக்கொள்வது இவர்களின் நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் வஞ்சம் தீர்க்கும் நோக்கத்தோடு ஒருவரை கொன்று உண்ணும் வழக்கங்களும் உண்டு. போலித் தெய்வ வழிபாடுகளிலும் இவை இடம்பெறுவதுண்டு. இவையே நரமாமிச உண்ணல்களாகும்.

ஆனால் இயேசுவின் திருஉடலை நற்கருணையில் நாம் உண்ணும்போது இறந்த ஒருவரை நாம் உண்பதில்லை. உயிருள்ள இறைவனையே உண்கிறோம். உயிர்த்தெழுந்த கிறீஸ்துவின் மகிமைப் படுத்தபபட்ட உடலையே (Glorified living body) உண்கிறோம். நாம் இயேசுவின் உடலை உண்பதால் இயேசுவுக்கு எவ்வித தீங்கும் செய்வதில்லை. அவரை உண்பதால் அவர் அழிந்துபோவதுமில்லை. மாறாக நித்தியத்துக்கும் வாழும் அவருக்கு மகிமையை அளிக்கின் றோம். அதுமட்டுமன்றி நற்கருணையை நாம் உண்ணும்போது நாமும் நித்திய வாழ்வின் பிணையை பெற்றுக்கொள்கிறோம். அத்துடன் நரமாமிச உண்ணலில் ஈடுபடுபவர்கள் தாம் விரும்பும் நோக்கத்தை அடைவதில்லை. ஆனால் இயேசுவின் உடலை உண்ணும் அனை வரும் நற்கருணையை கிறீஸ்து ஏற்படுத்தியதன் நோக்கத்தை அடைந்துகொள்கிறார்கள். எனவே நற்கருணை விருந்துக்கும் நர மாமிச உண்ணலுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பது தெளிவு.

---

திரு. எம். யோகநாதன்
நவாலி தெற்கு
மானிப்பாய்

கேள்வி : கணவனும் மனைவியும் மகிழ்ச்சியாக இல்லை, ஒற்றுமை யாக இல்லை. இதனால் சட்டரீதியாக இவர்கள் விவாகரத்து பெற்றுவிட்டார்கள். இவர்கள் வேறு திருமணம் செய்ய திருச்சபை அனுமதிக்குமா?

பதில் : சட்டரீதியாக விவாகரத்து பெறுவதற்கும் திருச்சபையால் திருமண அருட்சாதனத்தைப் பெற்ற கணவன் மனைவி பிரித்து வைக்கப்படுவதற்கும் இன்னொரு திருமணம் செய்ய அனுமதிக்கப்படுவதற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உண்டு. கணவனும் மனைவியும் பிரிந்து வாழ விரும்பினால் சிவில் நீதிமன்றுகள் அனுமதி வழங்கும்.

சிவில் நீதிமன்றுகள் போன்று திருச்சபையிலும் நீதிமன்றுகள் (Church Tribunals) உள்ளன என்பது உங்களுக்குத் தெரிந்ததே. இவற்றில் திருமணம் பற்றிய முறைப்பாடுகள் விசாரிக்கப்படும். இவற்றின்போது சம்பந்தப்பட்டவர்கள், சாட்சிகள் ,அழைக்கப்பட்டு கவனமாக விசாரிக்கப்படுவர். இவ்விசாரணைகளின் விளைவாக திருச்சபையில் செய்யப்பட்ட ஒரு திருமணம் அதன் ஆரம்பத்திலிருந்தே செல்லாததும் பயனற்றதும் (null and void) என்று கணிக்கப்பட்டால் மட்டுமே அத்திருமணம் பிரித்து வைக்கப்படும். இப்படிச் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான காரணிகள் திருச்சபைச் சட்டக் கோவையில் (CanonLaw) வரையறுக்கப்பட்டுள்ளன.

இனி உங்கள் கேள்விக்கு வருவோம். தம்பதிகள் மகிழ்ச்சியாக இல்லை என்ற காரணத்துக்காக திருச்சபை நீதிமன்று அவர்களின் திருமணத்தை செல்லாததும் பயனற்றதும் என்று அறிவித்து அவர்கள் பிரிந்து வாழவோ அல்லது இன்னொரு திருமணம் செய்யவோ ஒரு போதும் அனுமதிக்காது. வாழ்வில் மகிழ்ச்சியை நாம் ஏற்று அனுபவிப் பது போல துன்பங்களையும் மகிழ்ச்சியற்ற தன்மைகளையும் தாங்கி வாழ்வதுதான் அர்த்தம் நிறைந்ததும் மீட்பின் வழியுமான வாழ்வாகும்.

ஆனாலும் தம்பதிகளின் மகிழ்ச்சியற்ற நிலைக்கு அடிப்படைக் காரணம் திருமணத்தின் ஆரம்பத்திலேயே இருந்ததும் மறைக்கப் பட்டதுமான ஒரு பாரதூரமான குறைபாடுதான் என்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில் இத்திருமணம் திருச்சபையால் பிரித்துவைக்கப்பட வாய்ப்புண்டு.

ஆயினும் திருமணத்தின் பின்னர் ஏற்பட்ட குறைபாட்டினால் மகிழ்ச்சியான வாழ்வு பாதிக்கப்பட்டால் அது அத்திருமணத்தை பிரித்து வைப்பதற்கு காரணமாக அமையாது.

---

திருமதி. புனிதா மைக்கல்
8ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு

கேள்வி : தவக்காலம் எப்போது முடிவடைகிறது? என் நண்பி குருத்து ஞாயிறு தினத்தோடு என்று சொல்கிறார். நான் பெரிய வெள்ளியோடு என்றுதான் எண்ணுகிறேன். எம்மில் யார் சரி என்று கூறுவீர்களா?

பதில் : நீங்கள் இருவருமே தவறு.

தவக்காலம் விபூதிப்புதனோடு ஆரம்பித்து பெரிய வியாழன் இறுதி இராவுணவின் மாலைத் திருப்பலிக்கு முன்வரை நீடிக்கும்

பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி வழிபாடுகள் ஒன்றோடொன்று இரண்டறக் கலந்த பாஸ்கா நிகழ்வை நினைவு கூரும் ஒரே வழிபாட்டு நிகழ்வுகளாகும். தவக்காலத்தின் நிறைவில் ஆரம்பமாகும் இவை பாஸ்காத் திருவிழிப்பில் நிறைவு பெறுகின்றன.

உங்கள் நண்பி குருத்து ஞாயிறோடு தவக்காலம் முடிவடைகிறது என்று சொல்வதற்கு காரணம் அவர் விபூதிப்புதனிலிருந்து 40 நாட்கள் கணக்கிடுகிறாரென எண்ணுகிறோம். தவக்கால ஞாயிறு தினங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபவாச தினங்களாக கருதப்படுவதில்லையாதலால் அவற்றையும் சேர்த்து கணக்கிடமுடியாது.

தவக்காலம் என்கின்றபோது அவை பாஸ்கா நிகழ்ச்சிகளை நினைவு கூருவதற்கான ஆயத்த நாட்களே ஆகும். எனவே பெரிய வியாழன் மாலையில் தவக்காலம் முடிவடைகின்றது என்று கூறும்போது பெரிய வெள்ளி உபவாச நாள் அல்ல என்று கருத்திக்கொள்ள முடியாது. ஆண்டவரின் மரணத்தை உபவாசத்தோடு நினைவுகூர்வது மிகவும் பொருத்தமானதேயாகும்.

---

குறிப்பு :

அன்பார்ந்த இறையியல் கோலங்கள் வாசகர்களே!

நீங்களும் இறையியல் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை கேள்விகளாக எழுதி எமக்கு அனுப்பி வைக்கலாம். உங்கள் கேள்விகள் திருச்சபையின் விசுவாச உண்மைகள், வழிபாடுகள், திருச்சபைச் சட்டங்கள், வேதாகமம், திருச்சபையின் போதனைகள், திருச்சபை சரித்திரம் சம்பந்தமாகவோ மற்றும் கிறீஸ்தவ வாழ்வு சம்பந்தமாகவோ அமையலாம். எம்மால் இயன்ற வரையில் உங்கள் சந்தேகங்களை தீர்க்க முயற்சிப்போம்.

**உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

கேள்வி – பதில்
**இறையியல் கோலங்கள்**
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியலார்...... ஓர் அறிமுகம்

# இன்றைய இறையியலார்

# புனித தோமஸ் அக்குயினஸ் (1225– 1274)

புனிததோமஸ் அங்குயினஸ் அக்குயினோவைச் சேர்ந்த லான்டல்ஃ. (Landulf) பிரபுவுக்கும் தெயோடொறா (Theodora) என்பவருக்கும் இத்தாலிய தேசத்தின் றொக்காசெக்கா (Roccasecca ) என்னும் நகரில் மகனாகப் பிறந்தார். அவருக்கு ஐந்து வயதாகும் தருவாயில் அருகிலுள்ள ஆசீர்வாதப்பர் சபையின் ஆச்சிரமம் ஒன்றில் கல்வி பயில அனுப்பப்பட்டார். 1239இல் நேப்பிள்ஸ் (Naples) பல்கலைக்கழகம் புகுந்தார். அங்கு தனது படிப்பை முடித்துக்கொண்டு குடும்பத்தாரின் கடுமையான எதிர்ப்புக்களின் மத்தியிலும் 1244 இல் டோமினிக்கன் சபையில் தன்னை இணைத்துக்கொண்டார். பின்னர் அவர் தனது குடும்பத்தாரால் கடத்திச்செல்லப்பட்டுச் சிறை வைக்கப் பட்டார். ஆனால் மீண்டும் 1245இல் தன்னை அச்சபையில் இணைத்துக் கொண்டார். 1250 – 51களில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1274இல் கிரேக்க இலத்தீன் திருச்சபைகளை ஒன்றிணைக்கும் நோக்குடன் பாப்பிறை பத்தாம் கிரகோரியாரால் லையோன் பொதுச் சங்கத்தில் பங்குபற்றுமாறு பணிக்கப்பட்டு அங்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அவர் அங்கு செல்லும் வழியில் பங்குனி ஏழாம் நாள் இறைவனடி சேர்ந்தார். பாப்பிறை 22 ஆம் அருளப்பரால் 1323 இல் புனிதராக உயர்த்தப்பட்டார். பின்னர் 1567 இல் பாப்பிறை 5ஆம் பத்திநாதரால் திருச்சபையின் மறைவல்லுனர்களுள் ஒருவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அத்தோடு 1880 இல் பாப்பிறை 13 ஆம் சிங்கராயரால் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் பாதுகாவலராக நியமிக்கப்பட்டு எல்லா இறையியல் மாணவர்களும் இவருடைய சிந்தனைகளைப் படிக்கும்படியாக பணிக்கப்பட்டார்கள். இவர் தாழ்மை யின் சின்னமாகவும் புனிதத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தார் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது ஆக்கங்கள் சில......

1). இறையியல் திரட்டு (Summa Theologiae).

2). அஞ்ஞானிகளுக்கு எதிரான கொள்கைத் திரட்டு ( Summa Contra Gentiles ).

3). விவாத வினாக்கள் (Quaestiones disputatae).

4). விரும்பிய வினாக்கள் (Quaestiones quodlibetales).

5). அவரொய்ஸிக்க எதிரான அறிவு புலன் ஒருமை ( De Unitate intellectus Contra Averroistas).

6). பீற்றர் லொம்பார்ட், பொயேத்தியுஸ், டியோனிசியஸ், அரிஸ்டோட்டில் ஆகியோரின் கூற்றுக்களின் விரித்துரை (Commentaries on the Sentences of Peter Lombard on Boethins, on Dionysius and on Aristotle).

7). மாண்புயர் இவ்வருள்....... (Tantum Ergo) என்று தொடங்கும் கடைசி இரு அடிகளைக் கொண்ட பாடுவாய் எந்நாவே (Pange Linqua) என்ற பெரிய வியாழன் ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தத்தின் திருநாள் ஆகிய நாட்களில் பாடப்படும் பாடல்.

இவற்றுள் இறையியல் திரட்டு ( Summa Theologiae ) மிகவும் பிரபல்யமானதும் அன்றய, இன்றைய இறையியல்களினது அடித்தள மாகவும் விளங்குகின்றது. ஆனால் இது ஓர் பூரணப்படுத்தப்படாத ஓர் ஆக்கமாக அமைந்துவிட்டது. ஏனென்றால் அவர் தனது வாழ்வின் இறுதிக்காலத்தில் அனுபவித்த இறைவெளிபாட்டின் நிமித்தம் தான் எழுதிவை யாவும் வைக்கோல் எனக்கருதி "இறையியல் திரட்டை" முற்றுப்பெறாது இடைநிறுத்திவிட்டார். இருந்தும் அது இறையியலுக்கு அடிநாதமாகத் திகழ்கின்றது.

– சகோ. தே. ரவீராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Synopsis

# EUCHARIST IN THE HISTORY OF THE CHURCH

Rev. Fr. S. V. B. Mangalarajah

Taking the basic elements from the literal meaning of Eucharist from Greek and Latin it can be explained as the thankful commemoration or re – living of the gift of self of our Lord Jesus Christ.

It is known in the early church as the 'breaking of the bread' (Acts 2: 42 ) following the explicit command of our Lord (LK . 22:19).

In the 1st century the 'agape' or fraternal meal and the Eucharist were celebrated together. Gradually due to the abuses the Eucharistic celebration became a separate entity held on Sunday mornings. St. Justin in the 2 nd cent. was the first one to give an explicit account of the Eucharistic celebration. St. Hyppolyte in the 3rd cent gives a Eucharistic prayer which contains all the basic aspects of the Eucharist.

The long period from 6th to the 15th cent. did not witness any change in the celebration of the Mass. But the period saw the attitudes of the people changing drastically affecting the very nature of the Mass itself. The people distanced themselves from the Eucharist and considered it only as an object to be worshipped from afar. By the end of the 15th cent. the faithful were satisfied with receiving communion only once a year. The

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

mass became a ritual of the priest and the people had very little to do with it.

The council of Trent in the 16th cent. though re – established the nature and value of the Mass, the success was forthcoming very slowly.

After centuries of stagnation the last decades of the 19th cent. saw efforts of renewal. Pope Pius the X in the 20th cent. introduced liturgical reforms and promoted the liturgical movement which paved way for the 2nd Vatican council.

# EUCHARIST IN BIBLICAL ASPECT

*Bro. A. Soosainathan*

Eucharist is the symbol of love, unity and sharing. It is a symbol of thanksgiving. The presence of Our Lord in the Eucharistic species is an act of our faith.

The Paschal feast of the Old Testment is the basis for the Eucharist. The Jews celebrated the feast of Passover annually in rememberance of their deliverance. Originally there were two feasts: One is the eating of the Paschal lamb and the other is the eating of the unleavened bread.

In the New Testment Jesus himself becomes our paschal lamb to be secrificed for the expiation of our sins. During the last supper he took bread and wine gave thanks to God and distributed them to the disciples to eat and brink as his own body and blood.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Joachim Jeremias describes clearly the uniqueness of the paschal banquet. It was celebrated in Jerusalem and the celebration took place at night. The whole celebration was according to the Jewish norms.

Eucharist becomes the centre of the whole salvation history. It is the greatest gift of God. It is the source of eternal life.

# BASIC CHRISTIAN COMMUNITIES AND THE HOLY SPIRIT

*Rev. Fr. J. E. Jeyaseelan*

In Latin America the Basic Christian communities began to grow rapidly around the year 1960. The Medelin report gives evidence to this fact. The poor and oppressed need to be supported by the people of God. The colonisation of Latin – America can be seen in three stages:

**First Stage :** 1492 – 1808

The Indians in Latin America became colonised by Spain. That was the beginning of oppression. People lost their rights and freedom. The uprisal led to violence.

**Second Stage :** 1808 – 1870

When Spain was defeated by France Latin America became free. However the poor could not enjoy the freedom. All the privileges were controlled by a few people.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Third Stage :** 1870 – 1930

A new generation came to power but influnced by the free thinking of Europe and also by the Marxist ideology. Arms struggle began against oppression but certain christian leaders were firm in non violence to fight against injustice.

In the north and East of Sri Lanka the history is very similar to that of Latin America. The colonisation and oppression is a repeated history.

The prayer of the Jubille year 2000 invites us to read the signs of the times with the gift of wisdom of the Holy Sprit.

# LET ANPIAM (BCC) BLOOM

*Fr. S. Anthonimuthu* O.M.I

Surely, Holy Sprit of God is at work in our times, even in the upheavals taking place in our socio – political arena and in the church. Over the last few years especially, in our days a process of community awareness – so called Anpiam has been taking place. In this small community, participation becoming in -creasingly move felt and articulated. Anpiam is a sharpened sensibility towards the Early Christian community once again in our midst. Through Anpiam the Holy church values under the light of the Holy Scripture. Our Parishes are well aware of the nees for Anpiam. So much so, it is a great opportunity to construct for the whole human family a New World order. Hence, we must be alive to the sprit speaking to us through the signs of the times.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Lorat John, Anpiankal , அமைதி ஆச்சிரமம் செம்பியன்பற்று வடக்கு செம்பியன் பற்று, 2000.

2. FUELLENBACH, John , Proclaiming His, Kingdom; Meditation for personal Recollection , Divine Word Publication , Manila ,1992.

3. Karl Rhner , The Practice of Faith : A hand book of contemporary Spiritarlity , SCM Press LTD , 1982.

4. FUELLENBACH , SVD John The Kingdom of God ; The central Message of Jesus' teachings in the hight of the Modern World , Logos Publication , Inc , Manila , 1993.

❖ V. Mariathasan , Valvutharum Varthaigal .
Tamil naadu Biblical Catechetical Liturgical centre , Thindivanam 1998.

# IS LITURGY RELEVANT TODAY ?

Miss . T. Denny

With what motivation do we participate in the liturgical celebrations?. Liturgy cannot be isolated from life. It is unfortunate that some go for Sunday Mass because of the obligation.

We ought to participate fully and consciously in the liturgical celebrations. Going half way for the Mass will have no meaning. Homily is an important factor which should be listened with great attention.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Active and conscious participation of communion should be done with due reverence.

Once a priest while distributing communion went unnoticed of a lady who was waiting for communion. But when the priest realized his mistake he went and gave the communion to that lady. Even after receiving the communion the lady went on grumbling and complaining. Is that a meaningful participation?

Liturgy is a communitarian act. Hence all should partake in it fully and devoutly. Liturgy is a joyful celebration of the whole faith community. Everyone should help each other to participate in the liturgy meaningfully.

இறையியல் கோலங்கள் சஞ்சிகை நல்ல நல்ல இறையியல் கருத்துக்களையும் சமூகத்தின் இன்றைய யதார்த்தமான போக்கினையும் அதில் கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய வாழ்வு எப்படி அமைந்திருக்கின்றது? எப்படி அமையப் போகிறது? என்பது பற்றிய பல கருத்துக்களை சுவைபடவும் சிந்திக்கத் தூண்டும் வகையிலும் காலத்திற்கேற்ற கருத்துக்களை வழங்கி வருகிறதை யிட்டு நான் அதனை பாராட்டுவதோடு இன்னும் சிறப்பான நல்ல ஆக்கங்கள் வெளிவரவும் ஆசிக்கின்றேன்.

வண்ணம 01 – வடிவம் – 13 இதழ் கிடைக்கப்பெற்றது. அதில் இடம்பெற்றிருந்த ஆக்கங்கள் அனைத்தும் சிறப்பாக இருந்தன. அவற்றுள் என்னை மிகவும் சிந்திக்கவும, உலகின் இன்றைய யதார்த்த நிலைகளைக்கண்டு வேதனைப்படவும் வைத்த ஆக்கமாக "இன்றைய பாலைவனத்தின் எதிரொலி" அமைந்திருந்தது. அவ்வாக்கத்தை எழுதிய அருட்சகோதரனுக்கு எனது பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அரசியலில் ஆண்டவன் அந்நியனும், அகதியுமாக்கப் பட்டுள்ளான் கிறிஸ்தவன், கிறிஸ்தவ விழுமியத்தைத் தொலைத்த பாவியாய்ப் பரிதவிக்கின்றான்'

செல்வி - து. டெனி
யாழ். பல்கலைக்கழகம்

# UNIVERSALITY OF ST. LUKE

*Miss. Senkol Julia*

St. Luke' s uniqueness is expressed in his gospel when he focuses his attention on certain themes: The universality of salvation , special care for the poor, oppressed and concern for the widows are clear expressions of his uniqueness. He wrote his gospel for the gentiles and pointed out that the salvation is not only for the Jews but for all those who accept the good news of Jesus Christ. Jesus was accused for mingling with the sinners and the publicans. Luke's gospel is called the " Gospel of the poor ". Blessed are the poor in sprit:

God's infinite goodness and forgiveness are brought out in many parables. Sinful woman (7 : 36 – 50 ) , the prodigal son (15 : 11 – 32 ) , Zachaeus (19 : 1 – 10 ) are clear indications of God's mercy and his unconditional love.

Luke gives priority for prayer and for the role of the Holy Spirit. God listens to the prayer of the sinners and Jesus came not to seek the just but the sinners. Being a gentile himself, Luke understands feeling of the outcaste and the oppressed. His whole gospel reflects God's benevolent love, kindness and mercy in a special way for the poor and the oppressed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள் குறுக்கெழுத்துப் போட்டி

**இறையியல் கோலங்கள் இவ்விதழிலிருந்து தனது வாசகர்கள் மத்தியில் குறுக்கெழுத்துப்போட்டி ஒன்றை நடாத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.**

இப்போட்டிக்கான சொற்கள் கடைசியாக வெளிவந்த இறையியல் கோலங்கள் இதழில் இடம்பெற்ற ஆக்கங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்றன. இப்போட்டி உங்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களை அள்ளித்தருவதோடு **இறையியல் கோலங்களின் ஆக்கங்களை நீங்கள் கவனமாகப் படித்து உள்வாங்கவும் துணைபுரியும்.**

**சரியான விடையெழுதும் வாசகர்களிலிருந்து மூவர் குலுக்கல் முறையில் பரிசுக்கு தெரிவு செய்யப்படுவீர்கள்.**

1ம் பரிசு – ரூபா 250
2ம் பரிசு – ரூபா 150
3ம் பரிசு – ரூபா 100

இறையியல் கோலங்கள் சஞ்சிகையைப் பெறும் ஒவ்வொருவரும் இப்போட்டியில் பங்குபற்றுவீர்களென எதிர்பார்க்கிறோம், விரும்புகிறோம்.

## இறையியல் கோலங்கள் குறுக்கெழுத்துப் போட்டி – இல. 1

- இப்போட்டிக்கான சொற்கள் இறையியல் கோலங்கள் மார்ச் 2000 இதழிலிருந்து பெறப்பட்டுள்ளன.
- சொல் எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் குறிக்கும்.
- ஒருவர் எத்தனை விடைகளும் அனுப்பலாம். ஆனால் கீழே உள்ள கூப்பனில் மட்டுமே உங்கள் விடைகளை நிரப்பி அனுப்ப வேண்டும்.
- **விடைகள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் ~~ஆவணி~~ மாதம் 15ம் திகதி (15–08–2000).**
- **அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி – இல. 1**
  **இறையியல் கோலங்கள்**
  **புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி**
  **கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | 8 | 9 | | | | | |
| 10 | | | 11 | | | | |
| | | | | 12 | | | |
| | | | | 13 | | 14 | |
| 15 | | | 16 | | | | |
| | | | | | | | |
| | 17 | | | | | | |

<u>இடமிருந்து வலம்</u>

2 – கிறீஸ்துவின் மனிதத்துவத்தை நாம் <u>இதுவாக</u> அணிந்து கொண்டால் எல்லாம் வெளிச்சமாகும். (6) (வலமிருந்து இடமாயுள்ளது).

10–கிறீஸ்துவின் நானே நல்ல <u>இது</u> என்ற கூற்றுக்கேற்ப வாழவேண்டும். (3).

11 – கிறீஸ்துவின் உயிர்ப்பை நாம் <u>இவற்றின்</u> பின்னணியில் விளங்கிக்கொள்ள முடியும். (5) (ஒருமையிலுள்ளது) (வலமிருந்து இடமாயுள்ளது).

12 – மக்கள் மேல் சவாரி செய்யும் வேடதாரிகளுக்கு கிடைக்கப்போகும் சவுக்கடிகளிலிருந்து <u>இது</u> வரும். (4)

–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 – மனிதனுடைய தான்தோன்றித்தனமான வாழ்வுமுறை அவனை இறைவனின் இதிலிருந்து தூரத்தள்ளிவிடும். (3) (குழம்பியுள்ளது).

16 – பாலைவனப் பயணத்தின் எதிரொலியே ஸ்நாபக அருளப்பரின் இதுவாகும். (5) (குழம்பியுள்ளது).

17 – ஆதிக்கிறீஸ்தவர்கள் கிறீஸ்துவின் உயிர்ப்பை எவ்வித இதுவுமின்றி ஏற்றுக்கொண்டார்கள். (5).

மேலிருந்து கீழ்

1 - திருச்சபையின் இவ்வாறான போதனை எமது நம்பிக்கையை வாழவைக்கின்றது. (7).

3 – இன்றைய யதார்த்த நிலையும் இதன் பதிலும் முற்றிலும் முரண்பட்டவையாக உள்ளன. (5) (குழம்பியுள்ளது).

4 – இயேசுவின் இரத்தத்தினால் இதுவாகி பலரது இரத்தத்தினால் பிரசவிக்கப்பட்டதே இந்த விசுவாசம். (2).

5 – இயேசு சிறுவயதிலிருந்தே பெற்றோரிடம் இதனைக் கற்றுக்கொண்டார். (8) (குழம்பியுள்ளது).

6 – விசுவாசிகளின் இரத்தமாகிய இது திருச்சபை சுதந்திரமாக இயங்கும் அரசியல் உரிமை கிடைக்குமட்டும் தொடர்ந்தது. (4) (தலைகீழாயுள்ளது).

7 – அவர்களது வேண்டுதலும் இதுவும் வீண்போகவில்லை. (7).

8 – புதிய ஏற்பாடு இதன் கனாகனத்தையும் மகிமையையும் உணர்த்தி நிற்பதை காணலாம். (5).

9 – இது மு. வரதராசன் எழுதிய ஒரு நூல். (7) (குழம்பியுள்ளது).

13 – சடங்கு சம்பிரதாயம் என்று சொல்லி மக்களின் இவைகள் மறைக்கப்படுகிள்றன. (4) (தலைகீழாயுள்ளது).

14 – சென்ற இதழில் இது 13 ஆகும். (4) (குழம்பியுள்ளது).

தயாரித்தவர்: ஜெபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர்களின் கவனத்திற்கு!

## ~ இறையியலார் அறிமுகம்.

இந்த இதழிலிருந்து 'இறையியலார் அறிமுகம்' என்ற ஒரு தொடரை ஆரம்பித்திருக்கின்றோம். இத்தொடரில் இறையியலின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த இறையியலார்களை ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொருவராக அறிமுகம் செய்கிறோம். அந்த வரிசையில் இவ்விதழில் இறையியலின் தந்தை என்று வர்ணிக்கப்படுகிற புனித. தோமஸ் அக்குவைனாஸ் இடம் பெறுகிறார். அடுத்த இதழில் அறிமுகம் செய்யப்படுபவர் யார்? பொறுத்திருந்து பாருங்கள்.

## ~ தற்காலிக முகவரி

"இறையியல் கோலங்கள்" சஞ்சிகையை வெளியிடும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி தற்போதைய நிலை காரணமாக இடம் பெயர்ந்து பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இயங்கி வருவதை நீங்கள் அறிவீர்கள். எனவே உங்கள் தொடர்புகளை எமது தற்காலிக முகவரிக்கு எழுதினால் நாம் பெற்றுக்கொள்ள இலகுவாக இருக்கும். எமது நிரந்தர முகவரியையும் நீங்கள் பயன்படுத்தலாம். ஆனால் கடிதங்களை நாம் பெற்றுக்கொள்ள சிறிது தாமதமாகலாம்.

எமது தற்போதைய முகவரி:
"இறையியல் கோலங்கள்"
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
தியான இல்லம்,
பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

ஆண்டுச் சந்தா (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/=
தனிப்பிரதி ரூபா 25/=

தொடர்பு கொள்க:
"இறையியல் கோலங்கள்"
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி.
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.
இலங்கை.
தொலைபேசி 021 - 2482

# Irai-Iyal Kolangal

A Tamil Theological Quarterly
Annual subscription (incl. Postage within Sri Lanka) Rs. 80/=
Single Copy 25/=

Subscription and correspondence to:

Irai-Iyal Kolangal
St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna,
Sri Lanka..
Tel. No. 021-2482

J.S.Printers, Sulipuram.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org